மாநகர சபை, யாழ்ப

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 14 திங்கட்கிழமை (29.12.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 010

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

## மண்ணையும் மக்களையும் விட்டு ஓடமாட்டோம்

# எதிர்காலப் போராட்டத்தின் மூலம் புலிகளின் பலம் நிரூபிக்கப்படும்



## புலிகளின் தலைவர் பிரபாகரன் பேட்டி

(கொழும்பு)

நாம் மண்ணையும் மக்களையும் விட்டு ஓடப் போவதில்லை. புலிகள் பலமிழந்து விட்டதாக சர்வதேச ஊடகங்கள் கூறுகின்றன. எமது எதிர் காலப் போராட்டங்கள் மூலம் எமது பலம் நிரூபிக்கப்படும் என விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தெரிவித்துள்ளார். லக்பிம நியூஸ் ஆங்கிலப் பத்திரிகைக்கு மின்னஞ்சல் மூலம் வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோல் விலையை குறைக்க அரசு முடிவு

(கொழும்பு)

பெற்றோல் விலையைக் குறைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் பல நாடுகளின் எரிபொருட்களின் விலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான (12ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை கடலில் வைத்து புலிகளின் படகு மீது தாக்குதல்

### கடற்படை கூறுகிறது

பருத்தித்துறை கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகளின் படகு ஒன்றை தாக்கி அழித்துள்ளதாக கடற் படையினர் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை முனையில் கடற்பரப்பில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் கரையில் இருந்து 12 கடல் மைல் தொலைவில் காணப்பட்ட 16 மீற்றர் நீளமான விடுதலைப் புலிகளின் படகினை நேரடியாகத் தாக்கியழித்துள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இந்தப் படகில் இருந்த 4 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் கடற் படையினர் தெரிவித்திருக்கின்றனர். இது குறித்து விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து தகவல்கள் எதுவும் உடனடியாக வெளியாகவில்லை.

## முல்லைத்தீவை நோக்கிய படை நடவடிக்கை முறியடிப்பு

### 68 படையினர் பலி என்கின்றனர் புலிகள்

(கிளிநொச்சி)

முல்லைத்தீவை நோக்கிய படையினரின் பாரிய முன் நகர்வு நடவடிக்கை தமிழீழ விடுதலைப் புலிகளால் நேற்று முன்தினம் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதில் 68 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 75 பேர் காயமடைந்துள்ளனர். படையினரின் 17 சடலங்களும் படையப்பொருட்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாவது,

முல்லைத்தீவை (12ஆம் பக்கம் பார்க்க)

## விமானங்கள் இல்லாமையே படையினர் உயிரிழக்க காரணம்

### ரணில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

யுத்தக் களத்தில் காயமடையும் படை வீரர்களை உடனடியாக வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்வதற்கான விமானங்களை அரசாங்கம் பெற்றுக் கொடுக்காமையினாலேயே படையினர் பெருமளவில் உயிரிழக்கின்றனர்.

படையினருக்காக விமானங்களைக் கொள்வனவு செய்யப் பணமில்லையெனக் கூறும் அரசாங்கம், ஒரு மணித்தியாலத்திற்கு 3 ஆயிரம் அமெரிக்க டொலரை செலுத்தி மிஹின் எயாருக்காக விமானத்தை குத்தகைக்கு பெற்றுள்ளது என்று ஐ.தே.க. குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த போதே எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க இக்குற்றச்சாட்டை சுமத்தினார்.

இங்கு எதிர்க் (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் இலக்குகள் மீது விமானத் தாக்குதல்

(கொழும்பு)

முல்லைத்தீவில் அடையாளம் காணப்பட்ட புலிகளின் இலக்குகள் மீது விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10.30 மற்றும் 11 மணி ஆகிய நேரங்களில் இரு தடவைகள் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் (12ஆம் பக்கம் பார்க்க)

# வத்தளையில் தற்கொலைத் தாக்குதல் இராணுவ அதிகாரி உட்பட 8 பேர் பலி

### மேலும் 17 பேர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பின் புறநகர்ப் பகுதியான வத்தளையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.40 மணியளவில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்றில் இராணுவ அதிகாரி ஒருவர், விசேட அதிரடிப்படையினர் ஆறுபேர், பொதுமகன் ஒருவர் என சுமார் எட்டுப்பேர் பலியாகியிருக்கின்றார்கள். மேலும் 17 பேர் காயமடைந்திருக்கிறார்கள்.

வத்தளை ஹேக்கித்த வீதியில் கிறிஸ்தவ தேவாலய மொன்றுக்கு அண்மையில் அமைந்துள்ள விசேட அதிரடிப்படையினரின் அலுவலகத்தின் வாயில் முன்பாகவுள்ள சோதனைச் சாவடியில் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆண் தற்கொலைக் குண்டுதாரியொருவர் தாக்குதலை நடத்தியதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தின்போது ஐவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டதாகவும் ஏனைய (12ஆம் பக்கம் பார்க்க)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புலிகளின் ஆயுதக் கப்பலை தவறவிட்ட கடற்படையினர்

**தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதக்கப்பல் தொடர்பாக ஒரு வாரத்திற்கு முன்னர் கடற்படையினருக்கு தகவல்கள் கிடைத்திருந்தன. எனினும் கடற்படையினரால் அதனை வெற்றிகரமாக தடுக்க முடியவில்லை என கொழும்பிலிருந்து வெளிவரும் சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.**

**இது தொடர்பாக அதில் வெளிவந்த பாதுகாப்பு பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள் இங்கு தரப்படுகிறது.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரையோர கிராமமான சிலாவத்தை பகுதியை தக்க வைப்பதற்கு விடுதலைப் புலிகள் தம்மை தயார்படுத்தி வருகின்றனர். விடுதலைப்புலிகள் தமது பீரங்கி மற்றும் மோட்டார் நிலைகளையும் மாற்றி அமைத்துள்ளனர்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் படைகளும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டு அங்கு நிறுத்தப்பட்டுள்ளனர். சினைப்பர் படையணிகள் புதிய இடங்களில் நிறுத்தப்பட்டுள்ளதுடன் கடற்புலிகளும் ஜெயந்தன் பிரிகேட் மற்றும் சோதியா றெஜிமென்ட் படையணிகளும் முல்லைத்தீவு பகுதிக்கு நகர்த்தப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளுக்கு படைத்துறை விநியோகங்கள் சீராக கிடைத்துவருகின்றன என்பதும் மற்றும் ஒரு காரணி

விடுதலைப்புலிகளின் றோலர் படகு ஒன்றை தாம் கடந்த வாரம் தாக்கியழித்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் தொடர்பாக ஒரு வாரத்திற்கு முன்னர் கடற்படையினருக்கு தகவல்கள் கிடைத்தி ருந்தன.

கப்பலின் கடற்பாதை தொடர்பாகவும் அது பயணிக்கும் நாட்கள் தொடர்பாகவும் புலனாய்வுத்துறை தெரிவித்திருந்தது.

எனினும் கடற்படையினரால் அதனை வெற்றிகரமாக தடுக்க முடியவில்லை. விடுதலைப் புலிகளின் ஆயுதக்கப்பல் முல்லைத்தீவின் வடபகுதி கடற்பகுதியை டிசம்சர் 20ஆம் திகதி அடைந்திருந்தது.

அதில் இருந்த பொருட்கள் பாரிய பொதிகளில் கரைக்கு கொண்டு வரப்பட்டிருந்தன. விடுதலைப் புலிகளின் கப்பலில் இருந்து பொருட்கள் இறக்கப்பட்டது தொடர்பான ஒளிப்பட தகவல்கள் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பாதுகாப்புச் சபை மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகளின் ஒரு றோலர் மீது கடற்பண்டயினரின் படகுகள் தாக்குதலை மேற்கொண்ட போதும் மற்றைய ஒரு றோலர் ஆயுதங்களுடன் தப்பிச் சென்று விட்டது. அதனைப் போல முன்னரும் பல படகுகள் மூலம் ஆயுதங்கள் இறக்கப்பட்டுவிட்டன.

எனவே தான் விடுதலைப்புலிகள் கடந்த வாரங்களில் ஏற்பட்ட மோதல்களின் போது பாரிய அளவில் எறிகணைகளை பயன்படுத்தியிருந்தனர். அதனையே படை அதிகாரி ஒருவர் எறிகணை மழை என தெரிவித்திருந்தார்.

இம்மோதல்களில் எறிகணைகளால் படையினர் பாரிய சேதங்களை சந்தித்திருந்தனர்.

இந்த வருடத்தில் கடந்த 11 மாதங்களில் படைகளிலிருந்து 11 ஆயிரம் பேர் தப்பியோடி விட்டனர்.


அரசின் மொத்த படை பலம் தொடர்பான உண்மையான தகவல்கள் சில காரணங்களினால் வெளியில் தெரிவிக்கப்படாத போதும் அதன் பலம் 3 லட்சம் என தெரிவிக்கப்படுகின்றது. இதில் ஊர்காவல் படையினரும் பொலிஸாரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

படையினரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இந்த வருடத்தில் 38 ஆயிரம் பேரை படையில் சேர்த்துள்ளதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளபோதும் இந்த வருடத்தில் ஜனவரி மாதத்தில் இருந்து நவம்பர் மாதம் வரையிலான 11 மாத காலப்பகுதியில் 11 ஆயிரத்துக்கும் அதிகமானோர் படைகளில் இருந்து தப்பியோடியுள்ளனர்.

அரசு மேற்கொண்டு வரும் பெரும் எடுப்பிலான பிரசாரங்களை தொடர்ந்தே அதிகளவான இளைஞர்கள் படைகளில் இணைந்து வருகின்றனர். படையினரின் எண்ணிக்கை அதிகரித்து வருவது அவர்களின் ஆயுத தேவைகளையும் அதிகரித்துள்ளது. இதற்கு அதிக நிதிதேவை.

2009ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு நிதி (177.1 பில்லியன் ரூபாய்கள்) தற்போதைய ஆண்டை விட 11 பில்லியன் ரூபாய்கள் அதிகம். முன்னைய அனுபவங்களில் இருந்து பாதுகாப்புச் செலவுகள் தொடர்ந்து அதிகரித்து செல்வதே வழமையானதொன்று என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-5)



"யாழ்ப்பாணத்தின் எதிர்கால நோக்கு" தொழில்கள் மற்றும் கல்விக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வில் மாணவர்கள் கொடி ஏற்றுவதனையும் கண்காட்சி மற்றும் நிகழ்வுகளைப் பார்வையிடும் மக்களையும் படங்களில் காணலாம்.

## மின்சாரக் கேள்வி அதிகரித்ததால் மின்வெட்டை அமுல்படுத்தும் நிலை

### அமைச்சர் தெரிவிப்பு

வடக்கே அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கான மின்சார விநியோகத்தின் போது பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவிக்கின்றது.

அந்த பிரதேசங்களில் தினமும் ஒன்றரை மணித்தியால மின்வெட்டை அமுல்படுத்த நேரிட்டுள்ளதாக அமைச்சர் டபிள்யு.டி.ஜே செனவிரத்ன கூறினார்.

சிவில் நிர்வாக நடவடிக்கைகள் உறுதிசெய்யப்பட்ட பின்னர் வடபகுதி மக்களின் மின்சாரத்துக்கான கேள்வி துரிதமாக உயர்வடைந்து செல்வதே இந்த நிலைமை ஏற்படக் காரணமென அமைச்சர் குறிப்பிட்டார்.

இரண்டு தசாப்த காலத்துக்கு மேல் வடக்கில் இடம் பெற்ற பயங்கரவாத செயற்பாடுகள் காரணமாக அந்த மக்களின் மின்சாரத் தேவையினை பூர்த்தி செய்வதில் இடையூறு ஏற்பட்டுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது. (ச-3)

எமது புதிய வெளியீடு
சிலம்பாட்டம் / திருவண்ணாமலை
அதனை தொடர்ந்து
* திண்டுகல் சாரதி
* அபியும் நானும்
} DVD, VCD
FLASH CD HOUSE
No.1 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(C-2039)

## கைதிகள் மீது துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி; மூவர் தப்பியோட்டம்

(கொழும்பு)

மாத்தறை சிறைச்சாலையில் இருந்து தப்பிச்சென்ற கைதிகளை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் கைதிகளில் ஒருவர் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது. துப்பாக்கி சூட்டுக்கு இலக்கான கைதி சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளில் நால்வர் தப்பியோடுவதை அவதானித்த அதிகாரிகள் அவர்களை இலக்கு வைத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டனர் எனவும் ஒருவர் கொல்லப்பட்ட அதே வேளை மற்றைய மூவர் தப்பியோடியுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பியோடிய கைதிகளை கண்டு பிடிப்பதற்கு விஷேட பொலிஸ் குழுவினர் நடவடிக்கைகளை முன் னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ச-5)

Patrician Institutes
VACANCY
MOTOR MECHANISM INSTRUCTOR
மோட்டார் வாகனம் திருத்துதல் போதனாசிரியர்
மேற்படி பதவிக்கு தகைமை உள்ளவர்கள் உடனே எம்முடன் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ தொடர்பு கொள்ளவும். 05.01.2009 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: பதிவாளர்
61,(59) ST. PATRICK'S ROAD,
JAFFNA.
T.P. 2226148
(C-1925)

ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி ஆனந்தி குலசேகரம்
(ஓய்வு பெற்ற சிறாப்பர் - யாழ். மாநகரசபை, உரிமையாளர் - பழநி பான்சி, யாழ். பஸ் நிலையம்)
மலர்வு 29/07/1960
உதிர்வு 10/01/2008
எம்மை விட்டுப் பிரிந்தாலும் எம்முடன் வாழும் உணர்வே என்றும் உன் வாசனையுடன் வாழும் மதுரகன், குலமகள், திபாகரி (பிள்ளைகள்), குலசேகரம் (கணவர்)
101/10, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(2038)

# இன்று ஒரு தகவல்

## இரு வழிப்பறிக் கொள்ளையர்கள்

வெளியூருக்குப் போய்விட்டு காட்டுப்பாதை வழியாக திரும்பி வந்துகொண்டிருக்கிறோம்.

திடீரென இரண்டு வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் வந்து நம்மிடம் இருந்த எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு போய்விடுகிறார்கள்.

அந்த சமயத்தில் நமக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும்? அதைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். எதற்கு நினைத்துப் பார்க்கச் சொல்கிறேன் என்றால்... அதே வேதனை நம்முடைய ஆன்மீகப் பயணத்திலும் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்கிறார் ஒரு பெரியவர். (சுவாமி பரமார்த்தானந்தா)

ஏனெனில், ஆன்மீகப் பயணத்தின் நடுவிலும் இரண்டு வழிப்பறிக்கொள்ளையர்கள் வருவார்களாம். அந்த இரண்டு பேரும் யார் என்பதை இப்பொழுது தெரிந்து கொள்வோம்.

ஆன்மீகப் பயணத்தில் நாம் ஒரு எல்லையை (மோட்சம்) நோக்கிப் பயணம் செய்துகொண்டிருக்கிறோம்.

விவேகம் என்ற விலையுயர்ந்த பொருளைக் கையில் வைத்துக் கொண்டுதான் பயணத்தைத் தொடரமுடியும். விவேகம் இல்லையென்றால் நாம் அந்தப் பயணத்தைத் தொடரமுடியாது.

அப்படியிருக்கும் போது திடீரென இரண்டு கொள்ளைக்காரர்கள் குறுக்கே வந்து விவேகத்தைக் கொள்ளையடித்துப் போய்விட்டார்களானால் என்ன செய்வது?

அது சரி...யார் அந்தக் கொள்ளைக்காரர்கள்? ஒருவரின் பெயர்: காமம். அதாவது ஆசை. இன்னொருவரின் பெயர்: குரோதம். அதாவது கோபம். ஆசையும் சினமும் சேர்ந்துதான் நம்மிடமுள்ள விவேகத்தைப் பறித்துக்கொண்டு போய்விடுகிறது.

அதனால் நாம் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

ஆசை-சினம் இவையிரண்டும் மனதில் உண்டானால் அதை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும்.

வளரவிட்டால் ஆபத்து. அப்படிக் கிள்ளி எறிவதற்கு நாம் ஒரு கத்தியை உபயோகப்படுத்த வேண்டும். அந்தக் கத்திக்குப் பெயர்தான் புத்தி.

வழக்கமாக நாம் முதலில் கோபப்படுகிறோம். அதன் பின் வருத்தப்படுகிறோம். இனிமேல் கோபமே படக்கூடாது என்று நினைத்துக்கொள்கிறோம். இதே தீர்மானத்தை முன்பே செய்திருக்க வேண்டும். அதுதான் புத்திசாலித்தனம்.

ஆசையையும் கோபத்தையும் ஆரம்பத்திலேயே எடுத்தெறியவில்லையானால் நமது மனோசக்தி குறைந்து போய்விடும். கடைசியில் நாம் மிருகங்களாகி விடுவோம். இது பெரியவர்கள் நமக்குக் கொடுக்கும் எச்சரிக்கை.

சிலபேர் எந்தச் சந்தர்ப்பத்திலும் கோபப்படுவதில்லை. அதைப் பார்த்துவிட்டு நாம் அவர்களைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது.

ஒரு பிரயாணி விமான நிலையத்தில் ஒரு பணியாளரிடம் கோபத்துடன் சண்டைபோட்டுக் கொண்டிருந்தார். இந்தப் பிரயாணி ஜப்பான் போக வேண்டியவர். அந்த சிப்பந்தி பிரயாணிகள் கொண்டு வரும் பெட்டிகளையெல்லாம் வாங்கி ஒழுங்குபடுத்தி விமானத்துக்கு அனுப்பி வைக்க வேண்டியவர்.

அந்தப் பிரயாணி சிப்பந்தியை வாய்க்கு வந்த படியெல்லாம் திட்டினார்.

இவர் பதிலுக்கு கோபப்பட வேண்டுமல்லவா! ஆனால் மிகவும் பொறுமையுடன் அவருக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தார்.

இதைப் பார்த்தவர்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம். கொஞ்ச நேரத்தில் விமானம் வந்தது. பிரயாணி புறப்பட்டுப் போய்விட்டார்.

அதன்பின் அந்தச் சிப்பந்தியை அழைத்து ஒருவர், "அந்த ஆள் எவ்வளவு கோபமாகத் திட்டினார்? எல்லாவற்றுக்கும் உங்களால் எப்படி சிரித்துக்கொண்டே பதில் சொல்ல முடிந்தது? உங்களுக்கு கோபமே வராதா?" என்று கேட்டார்.

"என்னுடைய கோபத்தை வெளியே காட்டிக்கொள்ள மாட்டேன். அதைக் காட்டும் விதமே வேறு" என்றார் அந்த ஆள். "அது எப்படி?" என்றார் இவர்.

"இப்பொழுது அந்தப் பிரயாணி ஜப்பான் போய்க்கொண்டிருக்கிறார். அவருடைய பெட்டி படுக்கையெல்லாம் அமெரிக்காவுக்குப் போய்க்கொண்டிருக்கிறது!" என்று நிதானமாகவே பதில் சொன்னார் அந்த ஆள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அதிபர் சேவை தரம்-2, II இற்கான நியமனங்களை இடைநிறுத்துமாறு கல்வி அமைச்சு அறிவிப்பு

(திருகோணமலை)

இலங்கை அதிபர் சேவை தரம்-2,II இற்கு இணைக்கப்பட்டவர்களுக்கான நியமனங்களை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மாகாணக் கல்வி அமைச்சுகளுக்கு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அண்மையில் கல்வி அமைச்சினால் இலங்கை அதிபர் சேவை தரம்- 2,II இற்கு புதிதாக இணைக்கப்பட்டவர்களுக்கு எதிர்வரும் 01.01.2009 முதல் நியமனம் வழங்கப்படுவதற்கான கடிதங்கள் உரியவர்களுக்கு கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டது.

இதற்கமைய மாகாணக் கல்வி அமைச்சர்கள் புதிதாக இணைக்கப்பட்டவர்களுக்கான பாடசாலைகளைத் தெரிவு செய்து நியமனங்களை 01.01.2009 ஆம் திகதி வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தன.

எனினும், தற்போது பெப்ரவரியில் நடைபெறவுள்ள வடமேல், மத்திய மாகாண சபைத் தேர்தல்கள் முடிவடையும் வரை நியமனங்கள் வழங்க வேண்டாமென கல்வி அமைச்சு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளது. (5)

# சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்க நாடு முழுவதிலும் விழிப்புக்குழுக்கள்

## சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் வகையில் நாடு முழுவதி லும் விழிப்புக் குழுக்களை அமைப்பதற்கான விசேட செயற்திட்டம் ஒன்றை சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஆரம்பித்துள்ளது.

கிராமிய மற்றும் தேசிய மட்டத்தில் இந்த விழிப்புக் குழுக்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அதிகார சபையின் தலைவர் யகத் வெள்ளவத்த தெரிவித்துள்ளார்.

இதற்கமைய முச்சக்கரவண்டி சாரதிகளை விழிப்புக்குழுவினராக பயிற்றுவிக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படும் சிறுவர்கள் தொடர்பாக தகவல்களை உடனுக்குடன் பெறுக் கொள்ளும் நோக்கத்துடன் முச்சக்கர வண்டிச் சாரதிகளை விழிப்புக்குழுவில் உள்ளடக்கத் தீர்மானித்ததாக அவர் தெரிவித்தார்.

அடுத்த வருடத்தினுள் தேசிய மட்டத்திலான விழிப்புக் குழுக்களை அமைக்கும் நடவடிக்கையைப் பூர்த்தி செய்ய எண்ணியுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (5.3)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் சட்டமூலங்கள் மாற்றம் செய்யப்படும்

## அரசாங்கம் தெரிவிப்பு

அரச சார்பற்ற அமைப்புக்களின் சட்ட மூலங்கள் முழு அளவில் மாற்றம் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய சட்ட மூலங்கள் எதிர்வரும் 2 மாதகாலப் பகுதியினுள் நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள சட்டமூலங்கள் அரச சார்பற்ற அமைப்புக்களின் நடவடிக்கைகளை முழு அளவில் கட்டுப்படுத்த முடியாதுள்ளதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

புதிய சட்டமூலங்கள் நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் அமைச்சரவைக்கு அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அரச சார்பற்ற அமைப்புக்களின் பதிவுகள் மற்றும் அவர்களது நடவடிக்கைகள் குறித்த விபரங்களுடனான நிதி விபரங்கள் என்பனவே சமர்ப்பிக்கப்பட வேண்டும் என சட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட பொழுதிலும் அவற்றை சில அமைப் புக்கள் பின்பற்றத் தவறிவிட்டதாக பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (5,2)

# இராசி பலன்

*29.12.2008*
*(மார்கழி 14, திங்கட்கிழமை)*
*துதியை முன்னிரவு 10.20 மணிவரை*
*உத்தராடம் பின்னிரவு 1.48மணிவரை*
*இராகுகாலம்-7.59-9.29 மணிவரை*
*சுபநேரம்-12.29-1.59 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | அதிகாரம், அதிகபிரயாசை, போசன சுகம், தெய்வசிந்தை. |
| இடபம் | பிதாசிந்தை, புதியமுயற்சி, சரீரப் பிரயாசை, கட்டுப்பாடு. |
| மிதுனம் | எதிர்பாராத பிரச்சினை, காரிய துங்கல், வாகனபயம், போசன சுகம். |
| கடகம் | காரிய நன்மை, ஆரோக்கியம், தெய்வசிந்தை, செல்வாக்கு. |
| சிங்கம் | எடுத்தகாரியம் கைகூடும், உற்சாகம், பெரியோர் உதவி, தொழில் விருத்தி. |
| கன்னி | அமைதிக்குறைவு, வேலைச் சுமை, போசனசுகக் குறைவு, முயற்சி தாமதம். |
| துலாம் | மனச்சஞ்சலம், முயற்சிதாமதம், சுபசெலவு, உடல்நலக்குறைவு. |
| விருச்சிகம் | உறவினர் உதவி, போசன சுகம், காரிய அனுகூலம், விருந்து பசாரம். |
| தனுசு | உணர்ச்சி வசப்படல், காரிய தாமதம், பணவிரயம், போசன சுகக் குறைவு. |
| மகரம் | போசனசுகம், கற்பனை மிகுதி, நல்ல முயற்சி, நண்பர்கள் உதவி. |
| கும்பம் | பிரயாணம், காரிய தாமதம், பணவிரயம், சகோதரர் உதவி. |
| மீனம் | எதிர்பாராத நன்மை, காரிய அனுகூலம் பெருமையடைதல், போசனசுகம். |

வளவன்

# பட்டதாரி ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை ஜனவரி 12,13 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில்

(திருகோணமலை)

தேசியப் பாடசாலைகளுக்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான நேர்முகப்பரீட்சையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு 12, 13ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடத்த வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் தீர்மானித்துள்ளதாக தெரிய வருகிறது.

தேசியப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை நியமிப்பதற்காக நாடளாவிய ரீதியிலிருந்து போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்றுமுதல் கல்வி அமைச்சில் நடைபெறுகின்றது. எனினும், இந் நேர்முகப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து அழைக்கப்பட்ட பட்டதாரிகள் போக்குவரத்துப் பிரச்சினைகளைக் காரணம் காட்டி யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்து தருமாறு சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டிருந்தனர்.

இதற்கமைவாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரினால் கல்வி அமைச்சிடம் கேட்கப்பட்டதற்கிணங்க யாழ்.மாவட்டப் பரீட்சார்த்திகளுக்கு யாழ்ப்பாணத்திலேயே நேர்முகப் பரீட்சை நடத்தப்படுமென கல்வி அமைச்சு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# சகல பாடசாலைகளிலும் இரண்டு நாள் சிரமதானம்

## கல்வி அமைச்சு தீர்மானம்

நாட்டின் அனைத்து அரசாங்கப் பாடசாலைகளிலும் இரண்டு நாள் சிரமதான வேலைத் திட்டம் ஒன்றினை மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள் ளது.

புதிய ஆண்டின் கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகளை தயார்ப்படுத்தும் வகையில் இந்த சிரமதான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

2009 ஆம் ஆண்டின் பாடசாலை கல்வி நடவடிக்கைகளுக்காக நாட்டின் அனைத்து அரசாங்கப் பாடசாலைகளும் எதிர்வரும் 5 ஆம் திகதி திறக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5,6)

# வடக்கு மாகாண அலுவலர்களுக்கான பயண ஏற்பாடு அடுத்த கப்பல் சேவையில்

## அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையால் நியமனம் பெற்று திருகோணமலைக்கு கப்பல் மூலம் நேற்று செல்லவிருந்த முகாமைத்துவ உதவியாளர்கள், சுகாதார முகாமைத்துவ உதவியாளர்கள் பயணப் பாதுகாப்பு அனுமதி கிடைக்காமையால் செல்ல முடியாமல் வீடு திரும்பினர்.

வடக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர்களுக்கான மாகாண பொது நிர்வாக அமைச்சினால் நியமனம் பெற்ற 55 அலுவலர்களும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சினரல் நியமனம் செய்யப்பட்ட 42 அலுவலர்களுக்குமான பிரயாண ஒழுங்கு யாழ். அரச அதிபரினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

இதன்பிரகாரம் யாழிலிருந்து நேற்று கப்பல் மூலம் பயணிப்பதற்காக சிங்கள மகா வித்தியாலயத்தில் பயண ஏற்பாடுகளுடன் சென்ற மேற்படி அலுவலர்கள் படையினரால் பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப் படாமை காரணமாக வீடு திரும்பினர்.

இது தொடர்பில் யாழ்.அரச அதிபர் க.கணேஷிடம் கேட்டபோது, மேற்படி 97 அலுவலர்களுக்கும் அடுத்த கப்பல் சேவையில் பயணம் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார். (5)

# சீருடைத்துணி விநியோகம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கான இலவச சீருடைத்துணிகள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் வைத்து விநியோகிக்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கே.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

இதில் சாவகச்சேரி, மட்டுவில், கைதடி பாடசாலைகளுக்கு இன்று திங்கட்கிழமையும், கொடிகாமம், வரணி, உசன் பாடசாலைகளுக்கு நாளை செவ்வாய்க்கிழமையும் சீருடைத் துணிகள் வழங்கப்படும் என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (5, 29)

# முதியோர் பராமரிப்பு தொண்டர்களுக்கான நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் முதியோர் பராமரிப்புப் பயிற்சிக்கு தொண்டர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சுண்டுக்குளி காட்டுக் கந்தோர் ஒழுங்கையில் உள்ள யாழ். மாவட்ட சமூக நலத்துறைத் திணைக்கள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.


இப் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப் படுபவர்களுக்கு நாளாந்த ஊக்குவிப்புப் பணமும் மதிய உணவும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (5-4-29)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இரண்டாம் கட்டமாக வெளி மாவட்டங்களில் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்றவர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு யாழ்.கல்வி வலயம் அருகில் நடைபெறவுள்ளதால் அனைவரையும் நியமனக் கடிதங்களுடன் வருகை தருமாறு யாழ்.பட்டதாரிகள் செயற்குழு கேட்டுக்கொண்டுள்ளது. (5,6)

# ஈழத்துச் சிதம்பர திருவாதிரை உற்சவம் முதலாம் திகதி ஆரம்பம்



(காரைநகர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பர திருவாதிரை உற்சவம் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

உற்சவத்தில் ஒன்பதாம் நாள் பஞ்சரத பவனியும், பத்தாம் நாள் அதிகாலை ஆருத்திரா தரிசனமும் நடைபெறவுள்ளது.

உற்சவ தினங்களில் தினமும் காரைநகர் மாணிக்கவாசகர், மடாலயத்லும், காரைநகர் ஈழத்துச் சிதம்பர அறப்பணி நிலையத்திலும் அன்னதானம் வழங்கும் நிகழ்வு நடைபெறும்.

ஈழத்துச் சிதம்பர திருவாதிரை உற்சவத்தினை முன்னிட்டு தினமும் வடபிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபையினரும், காரைநகர் தனியார் சிற்றூர்திகளும் விசேட சேவைகளை நடத்த ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

கடந்த காலங்களைப் போல இம் முறையும் பெருமளவான பக்தர்கள் வருகை தரவுள்ளதைக் கருத்திற்கொண்டு (ஆலய சுற்றாடலில்) காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனையும் விசேட அடிப்படை வசதிகளை மேற்கொள்ளவுள்ளது. (5,36,246)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 8 இல் சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளதால் இவ்வாசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுக்கொண்டுள்ளார். (5,6)

# பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

பற்றீசியன் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் நடத்தும் தொழில்நுட்ப பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இதில் டிப்ளோமா, சான்றிதழ் கற்கை நெறிகளும் சுருக்கெழுத்தும் தடடெழுத்தும் (தமிழ்,ஆங்கிலம்), மோட்டார் வாகனம் திருத்துதல், ஜெனரல் எலெக்ரிஷன், வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல், கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி, மின் ஒட்டுனர் பயிற்சி, மரவேலைப் பயிற்சி, குளிர்சாதனப் பெட்டி திருத்துதல், பிளம்பிங், மேசன் வேலை ஆகியவற்றிற்கான பயிற்சிகளும் ஆரம்பமாகவுள்ளது.

அத்துடன் 2009 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் தைமாதம் தொடக்கம் வழங்கப்படவுள்ளதாக நிறுவனத்தின் பதிவாளர் அறிவித்துள்ளார். (5,6)


# கிராம சேவையாளர்களுக்கான மீள் நியமன விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ஓய்வுபெறும் கிராம சேவையாளர்கள் வெற்றிடமாகவுள்ள இடங்களில் கடமையாற்றுவதற்கு மீள் நியமனம் பெறுவதற்காக விண்ணப்பிக்கலாமென பொது நிர்வாக அமைச்சு அறவித்துள்ளது.

இதற்கமைய தற்போது கடமையாற்றும் இடத்திலோ அல்லது வேறு இடங்களிலோ வெற்றிடமுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளில் ஓய்வுபெறும் கிராமசேவையாளர்களுக்கு மீள்நியமனம் வழங்க பொது நிர்வாக அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கான சுற்றறிக்கை யாழ்.மாவட்ட செயலகம் ஊடாக சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (5)



சாவகச்சேரி வடக்கு ஆதிசிவ வீரபத்திரசுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவகாலங்களில் தொடர் ஆன்மீக சொற்பொழிவாற்றிய சைவப்புலவர் குமாரசாமி சுமுகலிங்கம், ஆலயக்குருக்களும் சைவக்குருமார் அர்ச்சகர் சபைத் தலைவருமான சிவஸ்ரீ க.கிருபானந்தக் குருக்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதை முதலாவது படத்திலும், உற்சவத்தை சிறப்புற நடத்திய உற்சவ பிரதமகுரு சிவஸ்ரீ த.வீரபத்திரகுருக்கள் "ஆதிசிவப்பிரியன்" என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.



# யாழ்.செய்திகள்

# வீதிச் சோதனைகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாடு பூராகவும் மீண்டும் வீதிச் சோதனைச் சாவடிகள் அதிகரிக்கப்பட்டு படையினரின் சோதனை நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பஸ் பயணிகள் இறக்கப்பட்டு சோதனை இடப்படுவதுடன் மோட்டார் வாகனங்களில் செல்பவர்களை படையினர் பதிவு செய்வதாகவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், மானிப்பாய் பகுதியில் உரிமையாளர்கள் தவிர்ந்த ஏனையோர் மோட்டார் சைக்கிள் பயன்படுத்தினால் பறிமுதல் செய்யப்படுமென இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (5)

# கௌரவிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சாரசபையில் நீண்ட காலம் பணியாற்றிய பி.அருளம்பலம் ஓய்வு பெறுவதையிட்டு கௌரவிக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொக்குவில் குளப்பிட்டியில் அமைந்துள்ள இலங்கை மின்சாரசபைப் பணிமனையில் மின் அத்தியட்சகர் எஸ்.குமாரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மின்சார சபையின் வட வலயப் பிரதிப் பொது முகாமையாளர் ஆர்.முத்துரட்ணானந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (5-4-10)

# சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட 15 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட 15வீதிகள் ஐக்கிய நாடுகள் செயற் திட்டச் சேவைகள் (யு.என்.ஒ.டி.எஸ்) அலுவலகத்தினரால் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

சங்கத்தானை யாழ். முதலாம் ஒழுங்கை, உலக வெளிவீதி, கண்டுவில் 2ஆம் ஒழுங்கை, வட்டாரம் 4-5 எல்லைவீதி, அரசடி ஒழுங்கை, தேவாலய வீதி, 1ஆம் ஒழுங்கை, பன்றிக்கேணி ஒழுங்கை, கிராம்புவில் ஒழுங்கை,

வண்ணாங்குளம் ஒழுங்கை, வேதவனப் பிள்ளையார் ஒழுங்கை, கல் வயல் முதலாம் மைல் வீதி, வாகையடி முதலாம் ஒழுங்கை, இரண்டாம் ஒழுங்கை, வாகையடி வீதி ஆகியனவே இவ்வாறு புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. (5,6,29)

# கல்வியியற் கல்லூரி விரிவுரையாளராக நியமனம்

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் க.தர்மராஜா ஹற்றன் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி தமிழ்ப்பாட விரிவுரையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் கல்வியமைச்சினால் இலங்கை கல்வியாளர் சேவை III இற்கு இணைத்துக்கொள்ளப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (5,6)

# இலங்கையில் தமிழர் 25

## மக்கள் வருகை

இடைக்கற்காலத்துத் தொல்லியல் சான்றுகளை ஆய்வுசெய்த அறிஞர்கள் இக்காலத்து மக்கள் தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்கும் பொதுவான மக்கள் என்பதையும், பிற்பட்ட காலத்து மக்களுக்கும் இவர்களுக்கும் உடலியல் சார்ந்த தொடர்புகள் காணப்படுகின்றன என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளனர். குறிப்பாக, இடைக்கற்கால மக்களுக் குரிய சில உடலியற் பண்புகள் தற்காலத்து இலங்கையின் வேடர் சமூகத்தினரிடையே காணப்படுவதை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டி யுள்ளனர்.

### கால எல்லைகள்

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து முன்னேற்றங்களைப் படிப்படியாகக் கால வரையறைகளுடன் திட்ட வட்டமாகக் காட்டும் அளவுக்குச் சான்றுகள் உள்ளன என்று கூறுவதற்கில்லை. தற்பொழுது உள்ள நிலையில், இடைக் கற்கால மக்கள் இலங்கையில் இற்றைக்கு 28,000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தனர் என்பதை உறுதிப்படுத்தச் சான்று உண்டு. இதற்குப் பல்லாயிரம் ஆண்டு களுக்கு முன் இவர்களுடைய மூதாதையர் இலங்கை நிலப் பகுதியை வந்தடைந்திருக்கலாம்.

இலங்கையில் கிடைத்த சான்றுகள் மேற்கூறிய முடிவுகளுக்கு உதவியிருந்தும், தமிழ்நாட்டில், குறிப்பாக திருநெல்வேலிக் கரையில், இதுவரை கிடைத்துள்ள சான்றுகள் இற்றைக்கு 10,000 ஆண்டுகளுக்கு முன் இடைக்கற்கால மக்கள் அங்கு வாழ்ந்தனர் என்று கூறவே இடமளிக்கின்றனர். இலங்கையில் போல 28,500 ஆண்டுகளுக்கு முன் இடைக்கற்கால மக்கள் வாழ்ந்தனர் என்று கூறமுடியாதுள்ளது.

மேலும் ஆய்வுகள் நடத்தப்பட்ட பின் தற்போது உள்ள கால எல்லையை மேலும் முற்பட்ட ஓர் எல்லைக்கு எடுத்துச் செல்ல முடியும் என்றே தோன்றுகிறது. எனினும், பொதுவாக உலகின் வேறு பாகங்களில் இற்றைக்கு 10,000ஆண்டுகளுக்கு முன் இருந்தே, இடைக்கற்காலப் பண்பாடு காணப் படுகின்றது. இதனால், இலங்கைச் சான்றுகளுக்குத் தற்போது கொடுக்கப்பட்டுள்ள கால வரையறைகள் தவறானவையா என்ற ஐயம் எழுகின்றது.

### புதிய கற்காலம்

இலங்கையைப் பொறுத்தமட்டில் இடைக்கற்காலத்தின் பின் புதிய கற்காலம் தோன்றவில்லை. வட இந்தியாவிலும், தெற்கே தமிழ் நாட்டுக்கு வடக்கிலும் உலகின் பல்வேறு இடங்களிலும் இடைக்கற்காலத்தின் பின் புதிய கற்காலம் தோன்றுகின்றது.

இலங்கையிலும் தமிழ்நாட்டின் பெரும் பாகத்திலும் இடைக்கற்காலம் முடிவடையும் கட்டத்தில் ஆதி இரும்புக் காலம் தோன்றுவதைக் காணலாம். இடைக்கற்காலம் மட்பாண்டங்கள் பயன்படுத்தப்படாத ஒரு காலம். சில ஆண்டுகளுக்கு முன் இலங்கையில் கற்கருவிகளுடன் மட்பாண்ட ஓடுகள் தொறவககந்த என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இவற்றின் காலம் இற்றைக்கு 6300 ஆண்டுகளுக்கு முன் என்றும் அறிவிக்கப்பட்டது. இந்த அகழ்வாய்வின் இறுதி முடிவுகள் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இப்புதிய தரவின் அடிப்படையில், இலங்கையில் புதிய கற்காலப் பண்பாடு காணப்பட்டதா என்ற வினா எழுப்பப்பட்டுள்ளது. தற்பொழுது உள்ள நிலையில் பதிய கற்காலப் பண்பாடு காணப்பட்டது. என்று கூறப் போதிய சான்று இல்லை என்லாம்.

சில ஆண்டுகளுக்கு முன் இலங்கையின் வட மேற்கில் மாந்தைப் பகுதியில் நடத்தப்பட்ட அகழ்வாய்வின்போது சில செப்புத் துண்டுக்ள கிடைத்தன. அங்கு இற்றைக்கு 3800 ஆண்டுகளுக்கு முன் செம்பு உருக்கப்பட்டதற்கான சான்று இவற்றால் வெளிப்படுவதாகக் கொள்ளப்படுகின்றது. இச்சான்றின் அடிப்படையில் இலங்கையில் செம்பும் கல்லும் கருவிகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட காலம் இருந்ததா என்ற வினா எழுகின்றது. ஆனாலும், போதிய சான்று இல்லாததால் தற்பொழுது இதுபற்றி எதுவும் திட்டவட்டமாகக் கூறமுடியாது.

### இடைக்கற்கால மக்கள் பேசிய மொழிகள்

இலங்கை நிலப் பகுதியில் இடைக் கற்காலத்தில் வாழ்ந்த மக்கள் பேசிய மொழிகள் யாவை என்பது எமக்குத் தெரியாது. இவற்றை அடையாளம் கண்டுகொள்வதும் கடினம். இன்று இலங்கையில் பேசப்படும் மொழிகளின் அடித்தளத்தில் இடைக் கற்கால மொழிகளின் கூறுகள் இருக்கின்றனவா என்பதைக் கண்டுகொள்ளும் அளவுக்கு வரலாற்று மொழியியல் ஆய்வு வளர்ச்சி அடையவில்லை. அத்தகைய ஆய்வு நடைபெறும்வரை வெறும் ஊகங்களையே முன்வைக்க முடியும். ஸிரான் தரணியகல கூறுவது போல, இப்பழைய மொழிகள் வேடர் மொழிகளாக அல்லது திராவிட மொழிகளாக அல்லது வேறு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளாக இருக்கலாம். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துப் பண் பாடுகள் பொதுவாகப் பல மொழிகள் பேசப் பட்ட சூழ்நிலையைக் கொண்டிருந்தன என லாம்.


ஆகவே, இலங்கையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் பேசப்பட்டன என ஊகிக்கலாம். இவற்றின் எச்சங்கள் இன் றைய சிங்கள, தமிழ் மொழிகளில் காணப் படலாம்.

நவீன காலத்து இலக்கண ஆசிரியர்களும் நவீன காலத்துக்கு முற்பட்ட இலக்கண ஆசிரியர்களும் சிங்கள மொழியில் 'சுதேச' மொழிச் சொற்கள் என அடையாளம் காணக் கூடிய பல சொற்கள் இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளனர். சிங்களமொழியின் மிகப் பழைய

பேராசிரியர்

**கா. இந்திரபாலா**

இலக்கண நூலாதிய *ஸிதத் ஸங்கராவ* என்ற நூலின் ஆசிரியரும் (13ஆம் நூற்றாண்டு) இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஹெள (தூயசிங்கள) மொழி இயக்கத்தைத் தொடங்கிய முனிதாஸ குமாரணதுங்கா என்ற அறிஞரும் இப்படியான 'சுதேச' மொழிச் சொற்களை சிங்கள மொழிக்கே உரிய தனித்துவமான சொற்களாகக் கருதினர் எனலாம். (தொடரும்)





பருத்தித்துறை பிரதேச சபை புலோலி பொது நூலகத்தில் நடைபெற்ற "ஒரு புத்தகம் ஒரு சமுதாயம்" நிகழ்வில் "அழியும் கோலங்கள்" சிறுகதை தொகுதி எழுத்தாளர் புலோலியூர் க. தம்பையா மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் பரு. பிரதேச சபை செயலாளர் ச.சந்திரயோகன் நிற்பதை முதலாவது படத்திலும்,

இந் நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட எழுத்தாளர் க. தம்பையாவுடன் இளைப்பாறிய யாழ். செயலக உதவி அரசாங்க அதிபர் வே. வீரபத்திரபிள்ளை, பரு.பிரதேச சபை செயலாளர் மற்றும் நூலகர் எஸ்.தெய்வேந்திரம் ஆகியோர் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# நீதித்துறை தீர்ப்புகளை அமுலாக்குவது அவசியம்

(நேற்றைய தொடர்ச்சி)

நீதித்துறை நிறைவேற்றுத் துறையையும், சட்டவாக்கத் துறையையும் சரிபார்க்க முடியுமெனினும், சரிபார்க்கப்படாமல் நீதித் துறை விடப்படுவதும் சலனத்துக்குரியதே! ஜனாதிபதி உட்பட எவருமே சட்டத்துக்கு மேலாக நகர முடியாது.

நாட்டின் சட்டமே மீயுயர் தன்மை மிக்கது. அவ்வாறன்றேல் தற்காலிக சர்வாதி காரிகளுக்கு வாய்ப்பேற்படும். அந்நிலை சட்ட ஆட்சிக்கு எண்ணற்ற தீங்குகளை கொணரும், ஏனைய அதிகார நிலைகளில் தவறான செயல்களைக் கட்டுப்படுத்துமளவுக்கு (நீதித்துறை நடவடிக்கை மூலம்) அடிப்படை உரிமைகளின் எல்லைகள் சக்திமிக்கவையாகும். இது தத்தமது அதிகார எல்லைகளை நீடித்துக் கொள்ளவேண்டும் என்ற ஆவல் கொண்ட ஒவ்வொரு துறையுடனான சமநிலையத் தலையீடுகள் ஆட்டமாகும்.

அதாவது, எவருமே தத்தமது காலணிகளுக்கு இரும்புக் குதிகளை அணிந்து மற்றவர்களை மிதிக்குமளவு பெரியவராக முடியாது என்ற நிபந்தனையிலமைந்த ஆரோக்கியமான நேரடி ஜனநாயகமாகும்.

அந்த வகையில் சட்டமானது, இன்றையதும், நாளையதும் பரம்பரைகளின் நலன்களின் மேன்மைக்கானதாக அமைவது சிறந்ததாகும்.

ஏனெனில், இன்றைய நிகழ்வுகளில் விளைவுகளும், எதிரொலியும் மீள் எழுகின்றது.

### ஜனநாயகம்

நபர்கள் எவருமே பதவிகளில் வரலாம், போகலாம். ஆனால், இன்றைய திருஷ்டாந்தங்கள் நாளைய கோட்பாடுகளாக மாறலாம். தேசத்தின் தீர்க்கமும் எதிர்காலமும் வலுவேறாக்கலின் மூன்று துறைகளிடையே அதிகாரப் போராட்டத்துக்கு இட்டுச் செல்லுமாதலால் அதிகார விளையாட்டை தவிர்க்கும் வகையில் பாதுகாக்கப்பட வேண்டும்.

நமது நாடு இருக்கின்ற இன்றைய காலகட்டத்தின் நிலைமைகளிடையே உள்ள கசப்பான நிலைமைகளுக்கு இது ஓர் ஆரோக்கியமான சூழலல்ல. ஜனநாயகத்துக்கு வெளியேயுள்ள சக்திகளை ஜனநாயகத்தின் பரப்பெல்லைகளுக்குள் கொண்டு வந்து ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டிய தருணமாகும்.

பாரபட்சமற்றவர்களாக கருதப்படுகின்ற நியமப்படியான சட்ட அமுலாக்கவாளர்கள், சட்ட அதிகாரிகள் இடையூறின்றி பணியாற்ற தேசம் வழிகாட்டவேண்டும்.

அரசியல்வாதிகள் வெளிப்படையான நிறைவேற்றுனர்கள், பிரபல்யம் தேடுனர்கள், ஆனால், நீதித்துறை அந்த மட்டத்துக்கு கீழிறங்கமுடியாது. சுயாதீனமாகவும், துணிச்சல் கொண்ட தாகவும் ஞானம் பெற்றதாகவும் திகழ முடியும்.

### நீதிபதிகள்

எவ்வாறாயினும் நீதிபதிகள் சட்டத்தை அறிந்தவர்கள். ஆனால், துறைசார் அறிவுடைமை அனுபவம் தேவைப்படுகின்ற துறைகளும் இருக்கமுடியும் என்பது கலந்தாலோசனைக்குரியது. சகலதும் அறிந்த இறைபங்காற்ற வேண்டுமென்று நீதிமன்றத்தை எவரும் எதிர்பார்க்கவோ ஊகிக்கவோ வாய்ப்பில்லை. அத்தகைய பிழையான முகப்போடு நீதிபதிகள் பணியாற்றுவதுமில்லை.

பாராளுமன்றத்தின் மக்கள் பிரதிநிதிகளிடம் தேசிய பணப்பையை அரசியமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது. பாராளுமன்றம் அதன் அதிகாரத்தை மிஞ்சி செயல்படின், நீதிமன்றங்கள் அதனை சரிபார்க்க முடியும். ஆனால், பாராளுமன்றத்துக்கு பதிலீடு செய்யமுடியாது.

### துணிவான தீர்மானமும் மீறமுடியாத் தன்மையும்

ஹெஜிங் உடன்படிக்கை, பெற்றோல் விலை நிர்ணயம் தொடர்பில் சட்டவாக்கத் துறையும், நிறைவேற்றுத் துறையும், பாராமுகமாயிருந்த தருணத்தே தீர்க்கமான தீர்மானத்துடன் சம்பந்தப்பட்ட திறத்தவர்கள், அதிகாரிகள் போன்றோரை சட்ட ரீதியின் கீழ் நீதித்துறை கொண்டு வந்தமை அக்கறையுள்ளோரைப் பொறுத்தவரை மகிழ்ச்சியே.

எனினும், பாராளுமன்றத்தின் அதிகார பரப்பெல்லைகளில் கால் வைப்பதன் மூலம் அரிசியலமைப்பின் மூலம் தமக்களிக்கப்பட்ட அதிகாரங்களை மீறி நீதித்துறை, தேசிய பொருளாதாரத்துக்கோ அல்லது தேசிய பாதுகாப்புக்கோ குந்தகம் ஏற்படும் வகையில் செயல்படின் மக்களின் இறைமையைக் காப்பாற்றுதல் என்ற கோட்பாடு மேலெழ முடியும்.

ஆனால், அத்தகைய ஒரு நடவடிக்கைக்குள் நீதித்துறை பிரவேசித்திருப்பதாகவோ, பிரபல்யம் பெற முற்படுவதாகவோ நீதித்துறைத் தலைமையின் நகர்வுகளிலிருந்தும், உரைகளிலிருந்தும் உணர முடியவில்லை.

**இஸ்மாயில் பி.மஆரிஃப்**
(தலைவர், சுயாதீன தேசிய முன்னணி)

இன்றும், எதிர்காலத்திலும் ஒரே அதிகார முனையின் கட்டுப்பாட்டுக்குள் நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை மற்றும் நீதித்துறை ஆகியனவற்றிலிருக்கும் ஒரு நாடாக இலங்கை திகழாதிருக்கட்டும்.

சகல அதிகார முனைகளும் நாட்டினதும் மக்களினதும் அக்கறை கொண்டு சட்டம், நியாயப்படி செயல்படவேண்டும். நாட்டையும் நாட்டு மக்களையும் விஷேடமாக அடுத்த சந்ததியையும் பாதுகாப்பது முக்கியமான தாகும். (முற்றும்)

# பத்திரிகை துறையில் சாதிக்க ஐ.ஐ.எம்.சி

முன்பை விட பன்மடங்கானவர்களை ஊடகத்துறை கவர்ந்துள்ளது. துறையின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியன் இன்ஸ்டிடியூட் ஒப் மாஸ் கெம்யூனிகேஷன் (ஐ.ஐ.எம்.சி) ஆரம்பிக்கபபட்டுள்ளது.

இந்தத் துறையில் புகழ்பெற்ற போர்ட் பவுன்டேஷன் மற்றும் யுனெஸ்கோ வல்லுநர்களின் உதவியுடன் மத்திய அரசு இந்த கல்வி நிறுவனத்தை டில்லியில் ஆரம்பித்துள்ளது. அப்போது மத்திய தகவல் தொடர்பு மற்றும் ஒளி பரப்புத்துறை அமைச்சராக இருந்த இந்திரா காந்தி 1965 ஆம் ஆண்டு ஐ.ஐ.எம்.சி. யை ஆரம்பித்து வைத்தார்.தற்போது மத்திய தகவல் தொடர்பு மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தின் நிதியுதவியுடன் தன்னாட்சி பெற்ற கல்வி நிறுவனமாக இது இயங்கி வருகிறது.

யுனெஸ்கோவின் இரண்டு ஆலோசகர்கள், சில ஆசிரியர்களுடன் எளிமையாக தொடங்கிய ஐ.ஐ.எம்.சி ஆரம்பத்தில் மத்திய பணிக்கு தேவையான தகவல் தொடர்பு அதிகாரிகளை உருவாக்கும் விதத்திலேயே படிப்புகளை வழங்கியது. ஆனால் 1969 ஆம் ஆண்டு முதல் சர்வதேச தரத்திலான புதிய படிப்புகளை வழங்கி வருகிறது.

தொடங்கப்பட்ட முப்பது ஆண்டுகளுக்குள்ளாக பிரின்ட் ஜேர்னலிசம், போட்டோ ஜேர்னலிசம்,ரேடியோ ஜேர்னலிசம், டெலிவிஷன் ஜேர்னலிசம்,டெவலப்மென்ட் கொம்யூனிகேஷன்,கொம்யூனிகேஷன் ரிசர்ச்,அட்வர்டைசிங், பப்ளிக் ரிலேஷன்ஸ் போன்ற பிரிவுகளில் கல்வியும்,சிறப்புப் பயிற்சிகளையும் வழங்கும் உலகின் மிகச் சிறந்த கல்வி நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இதை மாஸ் கொம்யூனிகேஷனுக்கான சிறப்பு மையமாக யுனெஸ்கோ உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் அங்கீகரித்துள்ளன. இங்குள்ள முது நிலை டிப்ளோமா படிப்புகள்- அட்வர்டைசிங் அண்ட் பப்ளிக் ரிலேசன்ஸ்-ஜேர்னலிசம் (ஆங்கிலம், இந்தி,ஒரியா,வானொலி மற்றும் தொலைக் காட்சி ஆகிய பிரிவுகளில்) இவை தவிர... இலங்கை உட்பட வளரும் நாடுகளைச் சேர்ந்த பத்திரிகையாளர்களுக்கு பிரத்தியேகமாக நடத் தப்படும் சிறப்பு வகுப்புகள் போன்றவற்றை யும் ஐ.ஐ.எம்.சி. ஒருங்கிணைத்து நடத்தி வருகிறது.

### ஆர்.யூ.பாலமுருகன்


இதில்,ஜேர்னலிசம், அட்வர்டைசிங்அண்ட் பப்ளிக் ரிலேஷன் படிப்புகளில் சேர ஏதாவது ஒரு இளநிலை படிப்பை நிறைவு செய்திருக்க வேண்டும். முதுநிலை பட்டதாரிகள், பத்திரிகை துறைகளில் முன் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இதற்கான நுழைவுத் தேர்வு டில்லி, புவனேஷ்வர்,கொல்கத்தா,பாட்னா, லக்னோ, மும்பை ,பெங்களூர்,கவுகாத்தி ஆகிய நகரங்களில் நடக்கிறது. இதில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, ஜூலை முதல்வாரத்தில் டில்லியில் நடக்கும் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படு வார்கள். ஆங்கிலத்தில் ஜேர்னலிசம் படிக்க விரும்பும் மாணவர்களுக்கு கொல்கத்தாவிலும் நேர்முகத் தேர்வு நடக்கும்.

எழுத்துத் தேர்வில் எடுத்த பெறுபேறுகள் மற்றும் நேர்முகத் தேர்வில் எடுத்த புள்ளிகள் அடிப்படையில் சேர்க்கைக்கான மாணவர் பட்டியல் தயார் செய்யப்படும். ஐ.ஐ.எம்.சி. மாணவர்களுக்காக ஸ்டார் டிவி போன்ற முன்னணி ஊடக நிறுவனங்கள் ஸ்கொலர்ஷிப் வழங்குகின்றன. இங்குள்ள டிப்ளோமோ படிப்புகளும் முழுநேரப் படிப்புகளே. இதில் சேரும் மாணவர்கள் பகுதி நேரமாக வேறு படிப்புகளில் சேர முடியாது. முழு நேரமாக பணி புரிபவர்களும் இதில் சேர்ந்து படிக்க முடியாது.


# சீனாவில் சர்வதேச சட்டப்படிப்பு

நாளுக்கு நாள் அதிகரித்துவரும் மக்கள் தொகைப் பிரச்சினையைத்தாண்டி, தனது தனித்தன்மை வாய்ந்த பொருளாதார முறைகளாலும், மக்களின் கடின உழைப்பாலும் உலகெங்கும் அறியப்படும் நாடாக சீனா உருவெடுத்துள்ளது. அண்மையில், ஒலிம்பிக் போட்டிகள் இங்கு நடைபெற்ற போது ஆங்கில அறிவு பெற இம்மக்கள் காட்டிய ஆர்வம் பற்றி நாம் ஏற்கனவே தகவல் வெளியிட்டிருந்தோம். காலத்துக்கேற்ற புதுப் புது முயற்சிகளைத் தவறாது செய்யும் சீனா,தற்போது சட்டப் படிப்புகளில் புதுமையைக் கொண்டு வருகிறது. ஐரோப்பிய பல்கலைக்கழகங்களுடன் இணைந்து சீனா



நடத்தும் முதல் சட்டக் கல்வி நிறுவனம் சீனாவின் பீஜிங் நகரில் ஆரம்பிக்கபட்டுள்ளது.

'சீனா -ஐரோப்பியன் யூனியன் ஸ்கூல் ஒப்லோ' என்ற பெயரில் தொடங்கப்பட்டுள்ள



இக் கல்வி நிறுவனம், சீனாவின் சட்ட நிபுணர்களுக்கு சீனா மற்றும் சர்வதேச சட்டங்களில் பயிற்சியளிக்கவுள்ளது.சீன அரசுக்கும், ஐரோப்பிய கூட்டமைப்புக்கும் இடையிலான ஒத்துழைப்பின் முக்கிய பகுதியாக இந்தக் கல்வி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

இக் கல்வி நிறுவனம் சீனா மற்றும் ஐரோப்பிய சட்டங்கள் பற்றிய பரஸ்பரம் புரிந்துகொள்ளும் தன்மையை அதிகப் படுத்துவதுடன், சீன-ஐரோப்பிய ஒத்துழைப்பின் முக்கிய அங்கமாக இருக்கும் என்றும் நம்பப்படுகின்றது.

இக் கல்விநிறுவனம், 'சீனா யுனிவர் சிட்டி ஒப் பொலிடிக்கல் சயன்ஸ் அன்ட் லோ' வின் ஒரு அங்கமாகத் திகழும்.

16சீன மற்றும் ஐரோப்பிய பல்கலைக் கழகம் இணைந்து நடத்தவுள்ள இக் கல்வி நிறுவனத்தில், பயிலும் மாணவர்களை சர்வதேச சட்டங்களை முழுமையாகப் பயிற்றுவிக்கவுள்ளது.




# உங்களுக்கு தெரியுமா?

சில விடயங்கள் ஆஹா! அப்படியா என்று வியக்கத் தோன்றும். ஏனென்றால் நாம் தொடர்ந்து தினந்தோறும் அவற்றைப் பயன்படுத்திக் கொண்டிருப்போம். ஆனால் அவற்றில் இந்த விடயங்கள் இருக்கின்றன என்று தெரியாது. யாராவது அதனைச் சுட்டிக் காட்டுகையில் வியந்து போகிறோம். அப்படிப்பட்ட சில தகவல்களை இங்கு காணலாம்.

◆ சீடிக்கள் என அழைக்கப்படும் கொம்பாக்ட் டிஸ்க்குகள், (CD) அதில் பதிந்துள்ள தகவல்களை நடு மையத்தி[illegible]லிருந்து படிக்கத் தொடங்கி விளிம்பில் முடிக்கின்றன. இது மியூசிக் ரெக்கோர்டர்களுக்கு எதிரான வழியாகும். மியூசிக் ரெக்கோர்டர்கள் விளிம்பிலிருந்து தொடங்கி நடுப்பாகம் செல்கின்றன.

◆ எக்ஸ்எல் தொகுப்பில் தகவல்களை பேஸ்ட செய்திட கொண்ட்ரோல்+வி அல்லது பேஸ்ட் பட்டனைத் தான் பயன்படுத்த வேண்டும் என்பதில்லை. ஒரு செல்லில் உள்ள தகவல்களைக் கொண்ட்ரோல்+சி கொடுத்து கொப்பி செய்திடுங்கள். பின் எந்தச் செல்லில் அவற்றை பேஸ்ட் செய்திட வேண்டுமோ அந்த செல்லில் கேர்சரைக் கொண்டு செல்லுங் கள். பின் என்டர் பட்டனை மட்டும் தட்டுங்கள். ஆஹா! பேஸ்ட் ஆகிவிட்டதா உங்கள் தகவல்கள்.

◆ மொபைல் போன் பயன்படுத்துபவர் எண்ணிக்கை உலக அளவில் 2008 ஆம் ஆண்டு முடிவில் 400 கோடியாக இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

◆ அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த பில் கிளின்டன் எத்தனை இமெயில்களை ஒரு ஜனாதிபதியாக அனுப்பி இருப்பார். ஆயிரம்? இலட்சம்? இல்லவே இல்லை. இரண்டு மட்டும் தான். ஒன்று ஜோன் கிளென் என்பவருக்கு -அவர் ஸ்பேஸ் ஷட்டில் விமானத்தில் இருக்கையில். இன்னொன்று தனக்கான இமெயில் சரியாகச் செயல்படுகிறதா என்று பார்க்க ஒரு டெஸ்ட் இமெயில்.

◆ ரேடியோ அலைகள் ஒலி அலைகளைக் காட்டிலும் மிக மிக வேகமாக பயணிக்கின்றன. ஒரு அறையில் பேசப்படும் ஒலி அந்த அறையின் பின் சுவர்களை அடையும் முன் அந்த ஒலியை ரேடியோ மூலம் ஒலி பரப்பினால் அந்த நேரத்தில் 18 ஆயிரம்கிலோ மீற்றர் பயணம் செய்திருக்கும்.




◆ ரைப்ரைடர் கீ போர்ட் டை குவேர்ட்டி (QWERTY) கீ போர்ட் என அழைக்கிறோம். இது கீகளின் வரிசையில் எழுத்துக்களுக்கானவற்றில் முதல் வரிசையில் முதல் ஆறு கீ களை இணைத்த சொல்லாகும். இன்னொரு விடயம் என்னவென்றால் Type-writer என்ற சொல்லை முதல் வரிசையில் உள்ள கீகளைக் கொண்டே அமைக்கலாம்என்பதே.



◆ மைக்ரோசொப்ட் நிறுவனத் தின் வேர்ட் தொகுப்பில் சேவ் என்ற செயல்பாட்டிற்காக ஐகன் இன்னும் பிளப்பின் டிஸ்க்காகவே உள்ளது. அதிலும் அதன் ஷட்டர் பின்புறமாக இழுக்கப்பட்ட நிலையில் உள்ளது.


◆ இன்று இணையத்திற்கான ஏகப்பட்ட சேர்ச் இஞ்சின்கள் உள்ளன.முதல் முதலில் உருவாக்கப்பட்ட சேர்ச் இஞ்சின் குறித்துப் பார்ப்போமா! Archie என்ற பெயரில் முதல் சேர்ச் இஞ்சின் உருவானது .இதனை Alan Emtage என்பவர் தயாரித்தவர். இவர் McGill என்ற பல்கலைக்கழகத்தில் அப்போது மாணவராக இருந்தார். இது 1990 இல் உருவானது.

◆ உலகின் சிறிய ஹார்ட் டிஸ்க்கை உருவாக்கிய பெருமை தொஷிபா நிறுவனத்தைச் சேரும். 0.85 அங்குல அளவில் இந்த ஹார்ட் டிஸ்க் தயாரிக்கப்பட்டது. ஒரு அங்குலத்திற்கும் குறைவான அளவிலான டிஸ்க்கில் பல ஜிகாபைட் அளவிலான தகவல்களைக் கொண்டிருந்ததும் இந்த டிஸ்க்கே.

◆ இன்டர்நெட்டில் உலா வருபவர்கள் விக்கிபீடியாவை (Wikipedia) பயன்படுத்தாமல் இருக்கமாட்டீர்கள். அனைத்திற்கும் அதுதான் ஆதி அந்தம் முதல் தகவல்களைத் தரும் இணையக் களஞ்சியமாகும்.



நீங்களும் உங்களிடம் உள்ள தகவல்களை இதில் இடலாம் என்பது இதன் சிறப்பு. இந்த Wikipedia என்ற சொல் ஏன் இதற்கு வைக்கப்பட்டது என்று எப்போதாவது யோசித்திருக்கிறீர்களா! ஹவாய் மொழியில் 'Wiki' என்றால் விரைவில் என்று பொருள். அதோடு என்சைக்-ளோ பீடியாவின் பின் பகுதி சேர்க்கப்பட்டு இந்த சொல் உருவாக்கப்பட்டதாம்.




◆ பல வீடுகளில் மைக்ரோ ஓவன் அடுப்பு உள்ளது. இது பயன்படுத்தும் மின்சாரம் 600 வோல்ட் முதல் 1100 வோட்ஸ் வரை ஆகும்.சரி.உங்கள் மொபைல் போன் எவ்வளவு மின்சாரம் பயன்படுத்துகிறது என்று எண்ணிப் பார்த்திருக்கீறர்களா? 0.6 வோட்ஸ் மட்டும் தான்.

◆ இமெயிலில் @ என்ற எழுத்து பயன்படுத்தப்படுகிறது. இது எதனைக் குறிக்கிறது. இது ச்t என்ற ஆங்கில சொல்லின் சுருக்கம் ஆகும். இந்த இடத்தில் என்பதனை இது பொருளாகக் கொண்டுள்ளது. இந்த முகவரியில் உள்ளசேர்வரில்இவருக்குஇன்பொக்ஸ் உள்ளது என்பதே ஒரு இமெயில் முகவரியாகும்.

# வகுப்பு அடையாளமும் அதிகாரமும்

"உற்பத்தி" (Production) என்பதன் மூலமாக கார்ல் மார்க்ஸ் பொருட்களின் உற்பத்தியினை மட்டும் கருதவில்லை. "உற்பத்தி" என்ற பதத்தினை மார்க்ஸ் நுகர்வின் முறைகளின் உற்பத்தி என்ற விடயத்தினை விளக்குவதற்கும் பயன்படுத்துகிறார்.மார்க்ஸின் "நுகர்வின் முறைகளின் உற்பத்தி" (Production of manners of consumption) என்ற கருத்து எவ்வாறு பழக்கவழக்கங்கள் சமூகத்திலே கட்டமைக்கப்படுகின்றன என்பதனையும், அதன் வாயிலாக எவ்வாறு சித்தாந்தம் (ideology) உருவாகின்றது என்பதனையும் , சித்தாந்தம் எவ்வாறு பலம் மிக்க பிரஜை (Subject) மற்றும் பிரஜைகள் (Subjects) ஆகியோரின் உருவாக்கத்துக்கு வழிவகுக்கிறது என்பதனையும் ஆராய உதவுகிறது.

இவ்வாறு ஆராய்கையில் கார்ல் மாக்ஸுடன் அமைப்பியல் மார்க்ஸிஸ சிந்தனையாளர் லூயி அல்தூஸரின் கருத்துக்களையும் இணைத்து நோக்குதல் சிறந்தது.

மகேந்திரன் திருவரங்கன்
இறுதி வருட மாணவன்
பேராதனை பல்கலைக்கழகம்

தக்குருண்டிறிஸ் (The Grundrisse) என்ற நூலிலே குறிப்பிடப்பட்டிருக்கும் பின்வரும் உதாரணத்தின் வாயிலாக கார்ல் மார்க்ஸ் "நுகர்வின் முறைகளின் உற்பத்தி" பற்றி விளக்குகிறார்.

பசி பசியேதான் ,ஆனால் சமைக்கப்பட்ட இறைச்சியை கத்தி,முட்கரண்டி என்பவற்றின் உதவியுடன் நுகருவதன் மூலம் தணிக்கப்படும் பசி பச்சை இறைச்சியை கை , நகம் மற்றும் பற்களின் உதவியுடன் விழுங்கி நுகர்வதன் மூலம் தீர்க்கப்படும் பசியிலிருந்து வேறுபட்டது.

இந்த உதாரணத்திற்கு 'பசி' என்பது அதனுடன் இணைந்த வகுப்பு சார் சேர்மானங்களிலிருந்து பிரிக்கமுடியாத ஒன்றாக மனவுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. நவீன முதலாளித்துவ சமூகத்திலே பண மற்றும் பொருள் பலம் படைத்த பூசுவார்களே (the bourgeoisie) சமைத்த இறைச்சியை கத்தி மற்றும் முட்கரண்டி என்பவற்றின் உதவியுடன் நுகர்வதற்கான பொருளாதார வலிமை பெற்றோராக உள்ளனர். மேலும் இவ்வாறான பூசுவார்களே ஏனையோரைத் தொழிலுக்கு அமர்த்தி இறைச்சியைச் சமைத்துக் கொள்ளும் அளவிற்கு பணபலம் மிக்கோராக உள்ளனர்.

நவீன முதலாளித்துவ சமூகத்தின் ஒரு பிரிவினராலேயே சமைத்த இறைச்சி கத்தி , முட்கரண்டி என்பவற்றின் உதவியுடன் நுகரப்பட்டாலும், சமைத்த இறைச்சியைக் கத்தி,முட்கரண்டி என்பவற்றின் உதவியுடன் உண்ணும் பழக்கம் நவீன முதலாளித்துவ சமூகத்தின் பெரும்பங்கிலே "நாகரிகமான" பழக்கமாகக் கருதப்படுகிறது. இதற்கு மாறாக இச் சமூகத்திலே இறைச்சியை கை ,நகம் , மற்றும் பற்களின் உதவியுடன் விழுங்கி நுகரும் பழக்கமானது பூசுவார்களால் மட்டுமல்லாது , பாட்டாளி வர்க்கத்தினராலும் கூட 'நாகரிகமான' ஓர் உணவுப் பழக்கமாகக் கருதப்படுவதில்லை.

(தொடரும்)

## வாகன விபத்து நால்வர் பலி கதிர்காமத்தில் துயரம்

(கொழும்பு)

கதிர்காமத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் நால்வர் பலியாகியுள்ளனர்.

ட்ரக்கொன்று பஸ்ஸொன்றுடன் மோதியதில் ட்ரக்கில் பயணித்தவர்கள் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கதிர்காம யாத்திரைக்குச் சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்தவர்களே இவ்வாறு உயிரிழந்தனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பஸ் சாரதியை கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5)

## கட்டுப்பாட்டு பகுதிக்கு 36 பேர் வருகை

(கொழும்பு)

புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியைச் சேர்ந்த மேலும் 36 பேர் வவுனியா அரச கட்டுப்பாட்டுப்பகுதிக்கு வந்துள்ளனர் என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு வந்தவர்களில் 21 பேர் ஆண்களும், 10 பெண்களும், 5 சிறுவர்களும் அடங்குவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை முகாம்களில் அனுமதிப்பதற்கான நடவடிக்கையை படையினர் மேற்கொண்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

## கிறிஸ்து பிறப்பு அமைதி விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சாரசபை யாழ். நகர பணிமனை நடத்தும் கிறிஸ்து பிறப்பு அமைதி விழா இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு இலங்கை மின்சார சபையில் மின் அத்தியட்சகர் அ. அருள்நாதர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மின்சார சபையின் வட வலய பிரதிப்பொதுமுகாமையாளர் ஆர். முத்துரட்ணனந்தன் கலந்துகொள்ளவுள்ளார். (5-4)

## 2-வது அனல் மின் நிலையம் அமைக்க அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

இலங்கையில் இரண்டாவது அனல் மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்கான இறுதி அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், இலங்கை மின்சார சபையும், இந்திய நஷனல் பிறமல்பவர் கோப்றேசனும் இணைந்து இந்த மின் உற்பத்தி நிலையத்தை திருகோணமலையில் நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ளன.

இந்தத் திட்டம் தொடர்பாக இருந்த பல்வேறு தடைகள் தற்சமயம் நீக்கப்பட்ட நிலையில் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுவதாக மின்சக்தி மற்றும் சக்தி வலு அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (2,5)

## வடக்கில் காணி அளவை பணிகள் விரைவில்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்து இராணுவத்தினரால் மீட்கப்பட்ட வடக்குப் பகுதிகளில் காணி அளவைப் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக காணி அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

காணிகளை இனம் காணல், காணிப் பிரச்சினைகளைத் தீர்த்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அளவைப்பணிகளுக்காக புதிதாக 50 காணி அளவையாளர்கள் நியமிக்கப்படவுள்ளதாக காணி அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

காணி அளவைப்பணிகள் பூத்தியானதன் பின்னர் உடனடியாக மீள் குடியமர்த்தல் பணிகள் ஆரம்பிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (5)


# PATRICIAN INSTITUTES

## பற்றீசியன் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

## தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

## ஆரம்பம் : 05.01.2009

| | |
|---|---|
| A. ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING | DURATION 1 YEAR |
| B. DIPLOMA IN MICROSOFT OFFICE | DURATION 6 MONTHS |
| C. DIPLOMA IN TYPE SETTING | DURATION 3 MONTHS |
| D. DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING | DURATION 4 MONTHS |
| E. DIPLOMA IN DESK TOP PUBLISHING | DURATION 6 MONTHS |
| F. DIPLOMA IN ACCESS INCLUDINE S.Q.L | DURATION 3 MONTHS |
| G. INTERNET & E-MAIL | DURATION 1 MONTH |
| H. DIPLOMA IN INTERNET TECHNOLOGY | DURATION 5 MONTHS |
| I. DIPLOMA IN MICRO MEDIA | DURATION 5 MONTHS |

## CERTIFICATE COURSES

1. MS WORD - 2000
2. MS EXCEL - 2000
3. MS ACCESS-2000
4. MS POWER POINT
5. VISUAL BASIC VER 6.5
6. PASCAL
7. d BASE III+
8. PAGE MAKER
9. WINDOWS 95
10. COREL DRAW
11. D BASE FOR WINDOWS
12. PHOTO SHOP DELUX
13. ADOBE PHOTO SHOP
14. QUICK BOOK

**EACH 3 MONTHS**

| | |
|---|---|
| 1. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) (PITMAN LONDON EXAM PAPER மாதிரி வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| 2. சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) | காலம் 6 மாதங்கள் |
| 3. மோட்டார் வாகனம் திருத்துதல் (PETROL & DIESEL) (வாகனங்களின் செய்முறை மூலம் கற்பிக்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| 4. ஜெனரல் எலெக்ரிஷன் (மின்சார இணைப்பு மோட்டார் றிவைண்டிங்) | காலம் 6 மாதங்கள் |
| 5. வானொலி, தொலைக்காட்சிப்பெட்டி திருத்துதல் (Oscilloscope அசைவு காட்டி இனை கையாள்வதுடன் கூடிய முழுமையான பயிற்சியும் செய்முறையும். | காலம் 6 மாதங்கள் |
| 6. கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி வழங்கப்படும் (On the Job training) | காலம் 6 மாதங்கள் |
| 7. மின் ஒட்டுனர் பயிற்சி வழங்கப்படும் (ARC WELDING & ON THE Job TRAINING) | காலம் 6 மாதங்கள் |
| 8. மரவேலை (With use of machinery) வழங்கப்படும் (ON THE Job TRAINING) | காலம் 6 மாதங்கள் |
| 9. குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் | காலம் 6 மாதங்கள் |
| 10. PLUMBING | காலம் 6 மாதங்கள் |
| 11. MASONARY | காலம் 6 மாதங்கள் |

## வாகன உரிமையாளர்களுக்கான அறிவித்தல்

### வாகனத் தகுதிச் சான்றிதழ் -2009

2009 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் தை மாதம் தொடக்கம் வழங்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குறிப்பு:-**

1. பயிற்சிக்கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு ஆதாரங் காட்டி பங்குக்குருவானவரின் (Parist priest) சிபாரிசின் பெயரில் பயிற்சிக்கட்டணத்தில் சலுகையைப் பெறலாம்.
3. பயிற்சிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

☞ மேலதிக விபரங்களுக்கு

REGISTRAR,
PATRICIAN IN STITUTE
61,(59)St.PATRICK'S ROAD,
JAFFNA.
T.P. No: 021 222 6148
FAX: 021 222 6148
E.Mail: Spitte@Sltnet.lk

(சி/1920)

# 2009 ஆம் ஆண்டு உங்களுக்கு எப்படி?

## இடபம்

வரும் ஆங்கிலப் புத்தாண்டில் உங்களுடைய எண்ணங்கள் நிறைவேறும். உங்கள் மனதிலிருந்து மூர்க்கத்தனம் மறையும். குடும்பத்தில் நிம்மதியைக் காண்பீர்கள். கூட்டுத் தொழிலில் அதிக இலாபத்தை அள்ளுவீர்கள். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். தந்தை வழி உறவுகள் சீர்படும். உங்களின் உழைப்புக்கேற்ற ஊதியங்களைப் பெறுவீர்கள். செய்தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். அனைத்து விடயங்களிலும் நன்றாக யோசித்து ஈடுபடுவீர்கள். உங்களின் வார்த்தைகள் தீர்ப்புகள் போல் தீர்க்கமாக வெளிப்படும் வருமானம் சீராக இருப்பதால் சேமிப்பு விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

மே மாதத்திலிருந்து ஜுலை மாதம் வரை தொழில் ஸ்தானத்திலிருந்து குருபகவான் சனிபகவானைப் பார்வையிடுகிறார். இந்தக் காலகட்டத்தில் வாழ்க்கைப் பாடங்களைக் கற்றுக்கொள்வீர்கள். வாழ்க்கையில் உங்களுக்குஏற்பட்ட சலிப்புகள்மறையும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும். தான் உண்டு தன் வேலை உண்டு என்று வேலையில் கவனம் செலுத்தி உங்களின் சுய முன்னேற்றத்திற்குப் பாடுபடுவீர்கள். செய்யாத தப்புக்கு தற்காலிக வேலை நீக்கத்தில் இருந்தவர்கள் குரு பகவானின் கருணையால் குற்றமற்றவராகக் கருதப்பட்டு வேலையில் மீண்டும் சேர வாய்ப்பு உண்டாகும்.

தைரிய ஸ்தானத்தில் அமர்ந்துள்ள கேது பகவானுக்கு குரு பகவானின் பார்வை கிடைப்பதால் சகோதர -சகோதரிகளால் சிறப்பான நன்மைகளைப் பெறுவீர்கள். அவர்கள் உங்களின் பழைய தவறுகளை மன்னித்து உங்களுக்குத் தற்சமயம் தேவைப்படும் உதவிகளை முழுமையாகச் செய்வார்கள். சத்தான ஆகாரங்களை நேரம் தவறாமல் உண்டு மகிழும் போசன சுகம் கிடைக்கும். தத்துவ விடயங்களில் புரியாதவற்றுக்கு சரியான அர்த்தங்களை உணர்வீர்கள் உங்கள் சகோதரர்களின் வாழ்க்கையில் உங்களால் புதிய மாற்றம் ஏற்படும் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.

செப்டெம்பர் மாதத்திலிருந்து குரு பகவான் பூர்வ புண்ய ஸ்தானத்திலுள்ள சனி பகவானைப் பார்ப்பதால் குழந்தைகளால் உருவான கவலைகள் நீங்கும். விபத்துக்களால் ஏற்பட்ட உபாதைகள் மறையும் பண விரயங்கள் குறையும். குடும்பத்தின் செல்வாக்கு உயரும். கெட்டவர்களின் சகவாசத்தைத் தவிர்ப்பீர்கள். நண்பர்கள் வகையில் இருந்த பொல்லாப்புகளும் நீங்கும் உங்கள் மீது வீண் பழி சுமத்தியவர்கள் பகை மாறி நட்பு கொள்வார்கள்.

உத்தியோகஸ்தர்கள் அனைத்து வேலைகளையும் திருப்திகரமாக முடிப்பர். வருமானமும் படிப்படியாக அதிகரிக்கும். மேலதிகாரிகள் உங்களுக்குச் சாதகமாகவும் பக்கபலமாகவும் இருப்பார்கள். மேலும் அலுவலக வேலைகளில் தொந்தரவுகள் இருக்காது உங்களைத் தவறான செயல்களைச் செய்யத்தூண்டும்.

சக ஊழியர்களிடமிருந்து விலகிவிடுவீர்கள். அலுவலக ரீதியான பயணங்களை இடையூறின்றி முடித்துவிடுவீர்கள்.

வியாபாரிகளின் திட்டங்கள் நல்ல இலாபங்களைத் தேடித் தரும். கொடுக்கல் வாங்கலில் சிறப்புகள் உண்டாகும். விற்பனைப் பிரதிநிதிகளை பல சந்தைகளுக்கு அனுப்பி உங்களின் பொருட்களை விற்க முற்படுவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் ; அதனைச் செயல்படுத்தும் போது விழிப்புடன் இருப்பீர்கள் வியாபாரிகளிடையே உங்களின் கௌரவமும் அந்தஸ்தும் உயரும். அதேநேரம், கூட்டாளிகளை ஓரளவுக்கு மேல் நம்ப வேண்டாம்.

விவசாயிகளுக்கு விளைச்சல் பெருகி இலாபம் கொட்டும். புதிய யுக்திகளைப் புகுத்தி வருமானத்தை அள்ளுவீர்கள். குறிப்பாக கறுப்பு நிற தானியப் பயிர்களால் வருமானம் அதிகரிக்கும். கால் நடைகளாலும் நல்ல இலாபம் கிடைக்கும். எதிர்பார்த்த கடன்களை மானியத்துடன் பெறுவீர்கள். கொடுத்த கடன்களும் திரும்பி வரும் மனச் சோர்வு நீங்கி எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கையுடன் திகழ்வீர்கள்.

இந்த ராசி அரசியல்வாதிகள் நினைத்த காரியங்கள் அனைத்தையும் வெற்றிகரமாக முடிப்பீர்கள் அதேநேரம் தொண்டர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யாவிட்டால் அவர்களின் அதிருப்திகளுக்கு ஆளாக நேரிடும் மற்றப்படி பெயரும் புகழும் அதிகரிக்கும். உங்கள் எதிரிகளின் பலம் குறையும் எதிர்பார்த்த பதவிகள் உங்களைத் தேடிவரும். அரசு அதிகாரிகளுடன் சுமுகமான உறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள். எப்போதும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

கலைத்துறையினருக்கு எதிர்பாராத இடங்களிலிருந்து பணம் வரும் புதிய ஒப்பந்தங்களைச் செய்வீர்கள் .உங்கள் திறமைகளில் புதிய பொலிவைக் காண்பீர்கள். வெளியூர் பயணங்கள் நன்மை தரும் உங்களது உழைப்பின் அளவுக்கும் அப்பாற்பட்டு பாராட்டப்படுவீர்கள் .ஆனால் ரசிகர்கள் உங்களைவிட்டு சற்று ஒதுங்கியே இருப்பார்கள். இதைப் பெரிது படுத்தத் தேவையில்லை. மற்றபடி சக கலைஞர்களின் நட்பால் புதிய அனுபவங்களைப் பெறுவீர்கள்.

பெண் மணிகளைப் பொறுத்த வரை புதிய ஆண்டில் புத்தாடை அணிகலன்களின் சேர்க்கை உண்டாகும். வெளியூரிலிருந்து மனதிற்கினிய செய்திகள் வந்து சேரும். குடும்பம் என்கிற குறுகிய வட்டத்திற்குள் சிக்காமல் சமுதாயத்திற்கு உங்களால் இயன்ற செயல்களைச் செய்வீர்கள் குறிப்பாக ஆதரவற்ற பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவீர்கள் குடும்பத்தில் அமைதி நிலவும் .ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும் சொந்த முயற்சியில் செயற்கரிய காரியங்களைச் செய்வீர்கள்.

**ஜோதிடர் கே.சி.எஸ். ஐயர்**

மாணவமணிகள் கடுமையாக உழைத்துப் படித்து நல்ல பெறுபேறுகளை அள்ளுவீர்கள் அதேசமயம் மனக் குழப்பங்களில் இருந்து விடுபடுவதற்கு யோகா தியானம் போன்ற பயிற்சிகளை மேற்கொள்ளவும். தீய நண்பர்களின் நட்பைத் தவிர்க்கவும். உடல் நலத்தில் கவனம் செலுத்தவும். விளையாட்டுகளிலும் சாதகமான திருப்பங்களைக் காண்பீர்கள். எளிதாக பாடங்களைப் புரிந்து கொள்ள சூரிய உதய காலத்தில் படித்து மனப் பாடம் செய்யுங்கள்.

### பரிகாரம்


பிரதி சனிக்கிழமைகளில் சனி பகவானை தீபமேற்றி வழிபட்டு வர சிறப்புகள் கூடும்.

(வளரும்)

# பாகிஸ்தானுடன் போர் மூழும் அபாயம்; இந்திய போர்க் கப்பல்கள் அரபிக்கடலில்

(விசாகப்பட்டினம்)

போர்ப்பதற்றம் ஏற்பட்டிருப்பதால் இந்தியப் போர்க்கப்பல்கள் அரபிக்கடல் பகுதிக்கு விரைந்துள்ளன.



மும்பைத்தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தில் பாகிஸ்தான் தனது படைகளை இந்திய எல்லையில் குவித்துவருகின்றது.

பதுங்கு குழிகளையும் அமைத்து வருகிறார்கள். ஜெய்சல்மார்,பார்மர், கங்காநகர் , புஜ், ரஜோரி பகுதிகளில் உள்ள இந்திய இராணுவ நிலைகளை நோக்கி பாகிஸ்தான் படைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

பாகிஸ்தான் போர் விமானங்கள் ஒத்திகையில் ஈடுபட்டுள்ளன பாகிஸ்தானின் 9 போர்க்கப்பல்களும் இந்தியக்கடல் எல்லைக்கு அருகில் அணிவகுத்து நிற்கின்றன.

தன்னிடமுள்ள நீர் மூழ்கிக் கப்பல் களையும் பாகிஸ்தான் தயார் நிலையில் வைத்திருக்கின்றது.

### போர்க்கப்பல்கள் விரைந்தன

இதேபோல் இந்தியாவும் பாகிஸ்தான் எல்லையை ஒட்டிய பகுதியில் படைகளை நிறுத்தியுள்ளது.

இந்திய விமானப்படை,கடற்படை மற்றும் கடலோரப்பாதுகாப்புப்படை,மத்திய தொழில் பாதுகாப்புப்படை ஆகியவையும் தயார் நிலையிலுள்ளன.

மும்பைத்தாக்குதலில் தொடர்புடைய தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பாகிஸ்தானுக்கு இந்தியா விதித்திருந்தகெடு முடிந்துவிட்டதால் போர்ப்பதற்றம் அதிகரித்துள்ளது.

இதனால், இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த ஐ.என்.எஸ். ஜலஷ்வா ,ஐ.என்.எஸ்.ரன்வீ உள்ளிட்ட மிகவும் சக்தி வாய்ந்த 6போர்க் கப்பல்கள் அரபிக்கடலுக்கு அதாவது இந்தியாவின் மேற்குக்கடற்கரை பகுதிக்கு விரைந்துள்ளன. ஆனால், இதை கடற்படை பெரிதுபடுத்தவில்லை.

### கிழக்குக் கடற்கரைப் பகுதி

இது பற்றி இந்திய கடற்படை அதிகாரி ஒருவர் கூறுகையில் ,

தற்போது எழுந்துள்ள சூழ்நிலைக்கும் நவீன போர்க்கப்பல்கள் மேற்குக் கடற்கரைப்பகுதிக்கு அனுப்பிவைக் கப்பட்டிருப்பதற்கும் சம்பந்தம் இல்லை என்றும் வழக்கமான பயிற்சிக்காக அவை சென்றிருப்பதாகவும்தெரிவித்தார்.

அதே சமயம் இந்தியாவின் கிழக்கு கடற் கரைப் பகுதியிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருக்கிறது.

கிழக் குக் கடற் கரைப் பகு தியில் கடற்படைக் கப்பல் களும் ,கடலோரப் பாது காப்புப் படைக்கப் பல்களும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. (5)

# இந்திய ஏவுகணைகளை செயலிழக்கச் செய்வேன்

## பாகிஸ்தான் சோதிடர் தமாஸ்

இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் ஆட்சியாளர்களும் இராணுவ அதிகாரிகளும் வீர வசனம் பேசிவரும் நிலையில் தற்போது பாகிஸ்தான் சோதிடர் ஒருவரும் வாய் நீளம் காட்டியுள்ளார்.

பேராசிரியர் பாசல் கரிம் என்ற அவர் தனக்கு அதிக சக்தி இருப்பதாகக் கூறுகிறார். தனது சக்தியால் இந்திய ஏவுகணைகளை செயலிழக்கச் செய்து அழித்துவிடுவேன் என்று அவர் கதை அளந்துள்ளார்.

இந்தியாவின் தாக்குதலில் இருந்து பாகிஸ்தானைக் காப்பாற்ற தனது மந்திர சக்தியால் அனைத்து ஏற்பாடுகளும் செய்துவிட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இப்படிச்சொல்லி அவர் பாகிஸ்தான் இராணுவத்தினருக்கு தைரியம் ஊட்டி வருகிறார். பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்த சரியான நேரத்தை குறித்துக்கொடுக்குமாறு இந்திய சோதிடர்களிடம் இந்தியா கேட்டிருப்பதாகவும் பாகிஸ்தானை வீழ்த்த காளியின் ஆசியைப்பெற்றிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (5)

# பாலஸ்தீனம் மீது இஸ்ரேல் விமானத்தாக்கு ;155 பேர் பலி

(ஜெருசலேம்)

பாலஸ்தீன நாட்டின் காசா கடற்கரையோர பகுதியில் இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்று முன்தினம் பகல் 11.30 மணியளவில் திடீரென சரமாரியாக குண்டுகள் வீசி தாக்குதல் நடத்தின.

இதில் 155 பேர் பலியானார்கள். 200க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர். பொலிஸ் தலைமையகம் உட்பட 40க்கும் மேற்பட்ட முக்கிய இடங்களின் மீது இந்தத் தாக்குதல் நடந்தது.

சமீபத்தில், இஸ்ரேல் நாட்டின் மேற்கு பாலை வனப்பகுதியான நெசவ் மீது பாலஸ்தீனம் தாக்குதல் நடத்தியது.

ஒரு வாரமாக நடந்த முட்டாள் தனமான தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்று இஸ்ரேல் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இதைத் தொடர்ந்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இது தொடரும், விரிவான முறையில் தாக்குதல் நடத்தப்படும். தேவைப்பட்டால் தீவிரமாக நடத்துவோம் என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)

> ஒரு மனிதர் கோபமடையும் போது அவர் மனத்திற்குள்ளேயே புயல் எழும்புகிறது. மனச்சாட்சியை அது அழித்துவிடுகிறது.
>
> ~ ராஜாஜி

வலம்புரி

## தமிழகக் காங்கிரஸார் பொறுமை காக்க வேண்டும்

இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டுமென தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகள் கோஷமெழுப்பிவரும் நிலையில், தமிழகக் காங்கிரஸ் கட்சி தொல்.திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியுடன் மோதுவது தமிழினத்துக்கு ஆரோக்கியமானதல்ல.

இந்திய மத்திய அரசில் காங்கிரஸ் ஆட்சி நடந்தாலும் தமிழகக் காங்கிரஸ் பிரமுகர்கள் தமிழர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

இனப்பிரச்சினைத் தீர்வில் இந்திய மத்திய அரசின் பங்களிப்பு காத்திரமானது.

வெளிநாடுகளின் தலையீடின்றி இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாதெனக் கூறுவதில் வெளிநாட்டுத் தலையீடென்பது இந்தியாவையே குறிப்பதாகும்.

ஆகவே இந்தியாவின் நேர்மையான தலையீடே இலங்கை இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும்.

இலங்கை விவகாரத்தில் இந்திய மத்திய அரசை தலையிடுமாறு தமிழக சட்டசபையில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலாக நேற்று முன்தினம் தி.மு.க வின் கட்சிப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய முதல்வர் கலைஞர் கருணாநிதி மத்திய அரசை சாடியுள்ளார்.

இலங்கை விவகாரத்தில் மத்திய அரசு அசமந்தப் போக்கை கடைப்பிடித்து வருவதனால் இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் அநியாயமாகக் கொல்லப்படுகின்றனர் என முதல்வர் கருணாநிதி பகிரங்கமாகக் கூறியிருப்பது மத்திய அரசுக்கு தர்மசங்கடமாகிவிட்டது.

ஆக, மத்திய அரசு தொடர்ந்தும் மௌனம் சாதிக்குமாயின் –பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்பி யுத்த நிறுத்தம் செய்யத் தவறுமாயின் மத்திய அரசில் காங்கிரஸின் ஆட்சி தொடர வாய்ப்பில்லாமல் போகும்.

அதேசமயம் முதல்வர் கருணாநிதி அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை விலக்கிக் கொண்டால் அந்தோ கதிதான்.

எனவே விரும்பியோ விரும்பாமலோ இலங்கை இன விவகாரத்தில் இந்தியா தலையிட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது.

இந்நிலையில் தமிழகக் காங்கிரஸ் பொறுப்புடன் நடந்து கொள்வது கட்டாயமானதாகும்.

இலங்கைத் தமிழர்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் கட்சிகளுடன் காங்கிரஸார் முட்டி மோதிக் கொள்வது தமிழினத்துக்குக் கிடைக்கக் கூடிய நல்லதோர் வாய்ப்பை குழப்பி விடும்.

அதேசமயம் மத்தியில் ஆட்சி நடத்தும் காங்கிரஸ் அரசு தனது முழுக் கவனத்தையும் தற்போது பாகிஸ்தான் மீதே செலுத்திவருகிறது.

இதனால் இலங்கை விவகாரம் பின்தள்ளப் படுவதாகவும் இருக்கும்.

எதுவாயினும் பாகிஸ்தான் மீது போர் தொடுக்க தயாராவதற்கு மும்பையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவமே காரணமாயிற்று. இந்தியாவை மட்டுமன்றி உலக நாடுகளையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய மும்பை மரணங்கள் போன்று ஈழத்திலும் இடம்பெறுகின்றன.

ஆனால் அந்த மரணங்கள் வெளியுலகிற்குச் செல்வதில்லை. இதனால் ஈழத்தமிழரின் துயரம் கடலில் மிதக்கும் பனிக்கட்டிபோல அமிழ்ந்துள்ளது.

மும்பைச் சம்பவத்திற்காக இந்திய மத்திய அரசு பாகிஸ்தானுடன் போர் தொடுக்க ஆயத்தமாகுமாயின் ஈழத்தமிழர்களின் அவலத்தில் தமிழகத்தில் கொந்தளிப்பு ஏற்படுவது நியாயமான தென்பதை காங்கிரஸ் உணர்ந்து கொள்ள வேண்டும்.

# தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைய அரசு தீர்மானம்

(கொழும்பு)

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் அமைப்பிடமிருந்து ஆயுதங்களைக் களைவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பல்வேறு காரணங்களுக்காக அரசாங்கம் இந்த முடிவுக்கு வந்திருப்பதாக கூறப்படுகிறது. கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திர காந்தன் தலைமையிலான பிரிவினருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையிலான பிரிவினருக்கும் இடையிலான முரண்பாடுகள் அதிகரித்திருப்பதே அரசாங்கத்தின் இந்தத் தீர்மானத்துக்கு முக்கிய காரணம் எனத் தெரியவருகிறது.

இதன் ஒரு அங்கமாக அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியிருக்கும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட தலைவர்களுக்கு பொலிஸார் அல்லது இராணுவத்தினரின் பாதுகாப்புவழங்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் தற்போது பிள்ளையானுக்கும் கருணாவுக்கும் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் கடும் பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் கொழும்பு ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.


தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் குறிப்பாக கிழக்கு மாகாணத்திலுள்ளவர்கள் ஆயுதங்களைப் பயன்படுத்துவதால் அங்குள்ள பொலிஸாரும் இராணுவத்தினரும தமது பாதுகாப்புக் குறித்து கவனம் செலுத்தியுள்ளனர்.

தமது கடமைகளைச் செய்வதில் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்து கிழக்கு மாகாணத்திலுள்ள பொலிஸாரும், இராணுவத்தினரும் பாதுகாப்பு அமைச்சிடம் முறைப்பாடு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இதனையடுத்தே கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப்புலி உறுப்பினர்களின் ஆயுதங்களைக் களைந்து அவர்களை பாதுகாப்புத் தரப்பில் இணைத்துக் கொள்வதற்கான திட்டமொன்றைப் பாதுகாப்பு அமைச்சு தயாரித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த ஆயுதங்களைக் களையும் நடவடிக்கை எதிர்வரும் சில வாரங்களில் ஆரம்பிக்கும் எனப் பாதுகாப்புத் தரப்பு வட்டாரங்கள் உறுதிபடத் தெரிவித்துள்ளன. (5)

# ஐ.ம.சு.கூ. - தே.சு.மு. இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து





(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கும் தேசிய சுதந்திர முன்னணிக்கும் இடையே நேற்று முற்பகல் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

சுதந்திரக்கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

போர்உட்பட அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கு வது போன்ற பிரதான விடயங்கள் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், தேர்தல் காலங்களில் இணைந்து போட்டியிடுவது தொடர்பிலும் ஒப்பந்தத்தில் இணக்கம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஒப்பந்தத்தின் பிரதிகள் ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் பசில் ராஜ பக்ஷ உட்பட மூத்த அமைச்சர்கள் மற்றும் தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். (5)

# தேசிய இனத்தின் இறையாண்மையை மீட்க புலிகளுக்கு அங்கீகாரமளிக்க வேண்டும்

## தமிழீழ அங்கீகார மாநாட்டில் தீர்மானம்

தமிழீழ தேசிய இனத்தின் இறையாண்மையை தமிழர் மீண்டும் பெற தமிழீழ மக்களுக்கு அதன் வழிநிலையான, உறுதியான அமைதிவாழ்வு கிடைக்க இந்திய அரசும், உலக நாடுகளின் அரசுகளும் தமிழீழ விடுதலைக்கு அங்கீகாரம் வழங்கவேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் சென்னை அமைந்த கடற்கரையில் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன் தலைமையில் கடந்த வெள்ளியன்று நடந்த இளஞ் சிறுத்தைகள் எழுச்சிப் பாசறை தொடக்க விழா மற்றும் தமிழீழ அங்கீகார மாநாட்டில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் விபரம் வருமாறு,

கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஈழத் தந்தை செல்வா தலைமையில் தொடங்கி அடுக்கடுக்கான அறவழிப் போராட்டங்கள் மற்றும் அடுத்து வெடித்தெழுந்த ஆயுத வழிப்போராட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் எமது ஈழத்தமிழ் சொந்தங்கள் அளித்துள்ள அளப்பரிய ஈகங்களை அடுத்து இம் மண்ணுலகில் தமிழர்களுக்கு என மலர்ந்து வரும் தமிழீழ தேசத்தை ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய இனத்திற்கான தனியொருதேசம் என விடுதலைச் சிறுத்தைகளின் இம் மாநாடு தலை நிமிர்ந்த செருக்கோடும் பொங்கியெழும் பூரிப்போடும் அங்கீகரிப்பதில் பெருமையடைகிறது.

மக்கள் தீர்ப்பே மகத்தானது என்பதைப் போல, முதலில் தமிழீழத்தை அங்கீகரிப்போம்.

தமிழீழம் தமிழர் தேசம் என தமிழராய் வாழும் ஒவ்வொருவரும் உரத்து முழுங்கிட உறுதியேற்போம்.

இலங்கைத் தீவு இரு தேசிய இனங்கள் கொண்ட நாடு, இரு தேசங்கள் கொண்ட நாடு என்று 1983 யூன் திங்களில் பிரித்தானிய குடியேற்றச் செயலாளர் குறிப்பிட்டிருக்கிறார். தமிழர்களின் தாயகமான தமிழீழம் பல்லாயிரம் ஆண்டுகள் தனி இறையாண்மையைக் கொண்டு விளங்கியது.


தமிழ்நாடும் இலங்கைத் தீவும் பனியூழிக்காலமான கிறிஸ்துக்கு முன் 8 ஆயிரம் ஆண்டுக் காலத்தில் கடலால் பிரிக்கப்படுவதற்கு முன்இதே நிலப்பரப்பில் 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மொழியும் தமிழீழமும் தோன்றிற்று என்பார் மொழி ஞாயிறு பாவாணர். சிங்கள இனமும் கி.பி 8 ஆம் நூற்றாண்டில் அதாவது ஆயிரத்து 200 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிற்று.

2002இல் ஈழத்தமிழர் சார்பாக சிங்களவரோடு நோர்வே நடுநிலை நின்று செய்யப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை கிழித்தெறியப்பட்டது. காலம் காலமாக கிறித்தெறியப்பட்டவை உடன்படிக்கைகள் அல்ல. தமிழீழத் தேசிய இனத்தின் உயிர் என்பதை இம்மாநாடு கண்ணீர் தோய்ந்த விழிகளோடு பதிவு செய்கிறது.

இனியும் பேச்சுவார்த்தைகளோ உடன்படிக்கைகளோ தமிழீழ மக்களை ஏமாற்றவும் கொன்றொழிக்கவும் இடம் தராமல் தமிழீழ விடுதலையை அங்கீகரியுங்கள் என்று இந்திய அரசு மற்றும் அனைத்துலக நாடுகளை விடுதலைச் சிறுத்தைகளின் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது என்றுள்ளது. (ச–5)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## பலவீனமே மரணம்



உலகில் எல்லையற்ற சக்தி உங்களுக்கே சொந்தமானது.உங்கள் மனத்தை மறைத்துக்கொண்டிருக்கும் மூட நம்பிக்கைகளை விரட்டி அடியுங்கள் . நாம் துணிவுடன் இருப்போம்.

உண்மையை அறியுங்கள்,உண்மையையே கடைப்பிடியுங்கள். குறிக்கோள்,தூரத்தில் இருக்கலாம். ஆனால்,விழித்திருங்கள், எழுந்திருங்கள் இலட்சியத்தை அடையும் வரை,நிற்காதீர்கள்.

பலவீனர்கள்,அனைத்தையும் இழந்து தங்களை பலவீனமாக உணரும் போது, பணம் சம்பாதிப்பதற்காக எல்லா விதமான மரணங்களையும் கையாள்கிறார்கள். ஜோதிடத்தையும் பிறவற்றையும் நாடுகிறார்கள்.

***கோழையும் முட்டாளுமே விதி என்பான்*** என்கிறது சமஸ்கிருதப் பழமொழி ஒன்று ஆற்றல் மிக்கவனோ ***என் விதியை நானே வகுப்பேன்*** என்று கூறுவான். முதுமையை நெருங்குபவர்களே விதியைப் பற்றி பேசிக்கொண்டிருப்பார்கள்.

# இலங்கையில் தமிழர்களை கூண்டோடு கொன்றுவிட்டு

# சொர்க்கமே கொடுத்தாலும் அதனால் பலன் எதுவும் இல்லை

## இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலர்

(சென்னை)

ஈழத்தில் அன்றாடம் மரணத்துடன் போராடிக்கொண்டிருக்கும் எண்ணற்ற தமிழர்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. ஈழத்தில் உள்ள சகோதர, சகோதரிகளை கூண்டோடு கொன்றுவிட்டு அதன் பின்னர் இலங்கை அரசு சொர்க்கமே தந்தாலும் அதனால் எந்தப் பலனும் கிடைக்கப்போவதில்லை என்று இந்திய கம்யூனிஸ்ட் மாநிலச் செயலர் தா.பாண்டியன் கூறினார்.

ஊடகம் ஒன்றிற்கு அளித்த செவ்வி ஒன்றிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலர் தெரிவித்துள்ளதாவது,

**கேள்வி: இலங்கை மீன் வளத்துறை அமைச்சரின் கார் காரைக்கால் அருகே முற்றுகையிடப்பட்டிருக்கிறது. இந்த மறியலில் உங்கள் கட்சித் தொண்டர்கள் பங்கேற்றனரா?**

பதில்: எங்கள் தொண்டர்களும் இப் போராட்டத்தில் பங்கேற்றுள்ளனர். இதற்கு முன்பு இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தமிழகத்திற்கு வந்தபோது அவருக்கு எதிராகவும் எங்கள் கட்சித் தொண்டர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதை எங்களுடைய தார்மீகக் கடமையாகக் கருதுகிறோம்.

**கேள்வி: விடுதலைச் சிறுத்தைகள் நடத்திய மாநாடு தேவையற்றது என்று கருத்து தெரிவிக்கிறீர்களே?**

பதில்: அந்தமாநாட்டைக் கொச்சைப்படுத்தும் வகையில் நான் எந்தக் கருத்தையும் சொல்லவில்லை. இலங்கையில் அமைதி நிலவ வேண்டுமானால் முதற்கட்டமாக அற்கு போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும். இதை நாங்கள் மட்டுமல்ல எல்லா கட்சிகளும் பொதுத் தரப்பினரும் வலியுறுத்தி வருகிறோம்.

ஆனால், இலங்கையில் இன்னும் போர் நிறுத்தம் அறிவிக்கப்படவில்லை. அதற்காக எந்த நடவடிக்கையும் எடுப்பதாக தெரியவில்லை. இந்நிலையில் தமிழீழத்திற்கு அங்கீகாரம் கிடைக்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும். எனவே, இலங்கையில் முதலில் போரை நிறுத்தட்டும் அது தான் முக்கியம்.

**கேள்வி: இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எப்போது கொழும்பு செல்வார்?**

பதில்: பிரணாப் முகர்ஜி இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவர் என்று இந்தியப் பிரதமர் வாக்குறுதி அளித்து நாட்கள் பல கடந்து விட்டன. இன்னும் பிரணாப் முகர்ஜி இலங்கை செல்வதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை. ஒருவேளை அவருக்கு வீட்டில் ஏதாவது பிரச்சினை இருக்கிறது போலும்.

**கேள்வி:விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்திருப்பது குறித்து?**

பதில்: தடை செய்யப்பட்ட இயக்கம் எதுவாக இருப்பினும் அதை ஆதரிப்பது கூடாது தான் தேச நலனுக்கு எதிராக நாம் செயல்படக்கூடாது. சட்டத்தைக் காப்பாற்றவும் அதை உரிய வகையில் அமுல்படுத்தவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மாநில அரசுகளின் கடமை. அந்த வகையில் தமிழக அரசு இவ்வாறு அறிவித்திருப்பதில் தவறில்லை.

**கேள்வி: இலங்கை தொடர்பாக தமிழக பத்திரிகைகள் பலவும் பலவிதமான முரண்பட்ட தகவல்களை வெளியிடுகின்றனவே?**

பதில்:தமிழகத்தைச் சேர்ந்த ஒரு சில பத்திரிகைகள் கிட்டத்தட்ட இலங்கை அதிபர் ராஜபக்ஷவின் குரல்களாகவே மாறிவிட்டன. அதனால்தான் இப்படியொரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது இந்நிலை மாறும்.

**கேள்வி:தமிழீழம் வேண்டும் என்கிற கோரிக்கை வெற்றி பெறுமா?**

பதில்: இலங்கையில் முதலில் அமைதி திரும்ப வேண்டும் .அதற்கு அங்கு நடந்து வரும் போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இது தொடர்பாக இலங்கை அரசை இந்திய அரசு வலியுறுத்த வேண்டியது. எல்லாவற்றையும் விட மிக முக்கியம். ஈழத்தில் அன்றாடம் மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கின்ற எண்ணற்ற தமிழர்களின நிலை மிகவும் பரிதாபத்துக்குரியது.

ஈழத்தில் உள்ளநம் சகோதர சகோதரிகளை கூண்டோடு கொன்று குவித்து விட்டு அதன் பின்னர் இலங்கை அரசு சொர்க்கத்தையே தந்தாலும் அதனால், யாருக்கும் எந்த வகையிலும் பயன் இல்லை. (5)

## விடுதலை சிறுத்தைகள் கட்சி மீது வழக்குப் பதிவு

நிபந்தனையை மீறி கூட்டம் நடத்தியதாக விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் இளைஞரணி மாவட்ட செயலாளர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இளஞ்சிறுத்தைகள் எழுச்சி மாநாடு மற்றும் தமிழீழ விடுதலை அங்கீகார மாநாடு கடந்த வெள்ளிக் கிழமை அமைந்த கரையில் உள்ள புல்லாரெட்டி அவென்யூவில் நடை பெற்றது.

முன்னதாக இக்கூட்டத்திற்கு பொலிஸார் அனுமதி மறுக்கவே விடுதலைச் சிறுத்தைகள் இளைஞரணி மாவட்ட செயலாளர் இரா.செல்வம் சென்னை உயர்நீதிமன்றத்தை அணுகினார்.பொலிரிடம் மீண்டும் மனு கொடுத்து, தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு ஆதரவாக பேச மாட்டோம் என்று உத்தரவாதம் அளிக்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்படி அண்ணாநகர் காவல் நிலையத்தில் செல்வம் மனு கொடுத்தார். நிபந்தனையின் பேரில் கூட்டம் நடத்த பொலிஸார் அனு மதி வழங்கினர். ஆனால், இக்கூட்டம் நிபந்தனை மீறி நடைபெற்றதாக அண்ணாநகர் பொலிஸார் வழக்குப்பதிவு செய்தனர். கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த இரா.செல்வத்தின் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (5)

## பெற்றோல் விலையைக் குறைக்காமைக்கு எதிராக ஜே.வி.பி. இன்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

நீதிமன்றத் தீர்ப்பிற்கிணங்க பெற்றோல் விலையைக் குறைக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று ஆர்ப்பாட்டமொன்றை நடத்துவதற்கு ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

இன்று காலை ஹைட்பார்க் மைதானத்தில் ஒன்றுகூடி அங்கிருந்து பேரணியாக வந்து லிப்டன் சுற்றுவட்டத்தில் ஆர்ப்பாட்டத்தை நடத்தவிருப்பதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் கூறினார்.

நீதிமன்றத் தீர்ப்பிற்கிணங்க பெற்றோல் விலையைக் குறைக்காமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்த விருப்பதாகவும் இதற்கும் செவிசாய்த்து அரசாங்கம் பெற்றோல் விலையைக் குறைக்காவிட்டால் நாடளாவிய ரீதியில் பாரிய தொடர் போராட்டங்களை முன்னெடுக்கப் போவதாக அவர் குறிப்பிட்டார்.

உயர் நீதிமன்றம் பெற்றோல் விலையை 100 ரூபாவாகக் குறைக்குமாறு தீர்ப்பு வழங்கியபோதும் அதனை அரசாங்கம் நடைமுறைப்படுத்தாமலிருப்பதாக விஜித ஹேரத் கூறினார்.

உலக சந்தையில் பெற்றோல் விலை குறைவடைந்திருந்த போதிலும் இலங்கை அரசாங்கம் பெற்றோலின் விலையைக் குறைக்காதிருப்பதுடன் அதன் இலாபத்தை பொது மக்களுக்கு பெற்றுக்கொடுக்க வில்லை யெனவும் குற்றஞ்சாட்டிய விஜித ஹேரத் தற்போது உலக சந்தையில் பெற்றோலின் விலை குறைந்திருப்பதால் இலங்கையில் பெற்றோலை 100 ரூபாவைவிட குறைந்த விலைக்கு விற்பனை செய்ய அரசாங்கத்தால் முடியும் எனவும் கூறினார்.

இது தவிர உலக டீசல், மண்ணெண்ணெய், எரிவாயு ஆகிய எரிபொருட்களின் விலையும் தற்போது குறைவடைந்திருப்பதாகக் குறிப்பிட்டிருந்த அவர் 12.5 கிலோ கிராம் எடையுடைய எரிவாயுவை அரசாங்கம் 1000 ரூபாவுக்கும் அதிகமாக விற்பனை செய்வதாகவும் இதனையும் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (5)

JESWIN & POINT CITY COMPUTER INSTITUTE

JPCI

2ND CROSS STREET, POINT-PEDRO
Tel. No:0776648721, 0212263620.

அரச அங்கீகாரம் பெற்ற தொழிற்பயிற்சி மையம்

O/L பரீட்சை முடித்துவிட்டீர்களா...?

உங்கள் விடுமுறைக் காலத்தை தகவல் தொழில் நுட்பத்தில் பயனுள்ள தாக்கிக் கொள்ளுங்கள்.

01.01.2009–10.01.2009 வரை O/L மாணவர்களுக்கான விசேட பயிற்சி நெறிக்கான பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

கணனியில் கைதேர்ந்தவர் ஆக வேண்டுமா...!

Srilanka Computer Driving Licence இனை
Diploma in SLCDL (4 Months) தெரிவு செய்யுங்கள்
Office Training Method (அரச அலுவலகங்களில் பணியாற்றுகின்றவர்கள் கற்கவேண்டிய விசேடப் பயிற்சி நெறி)

விசேட சலுகைகள்

*தகவல் தொழில் நுட்ப நூலகத்தில் அங்கத்துவம்
*வறிய மாணவர்களுக்கு தொழில் வாய்ப்பு
*கடனடிப்படையில் கணனி இயந்திரம் வழங்கல்
*சேமிப்புப் புத்தகம் வழங்கல்
*மாணவர்கள் விரும்பும் பயிற்சி நேரங்கள்
*மாணவர் அபிவிருத்திக்குழு செயற்பாடுகள்
*உத்தியோகத்தர்களுக்கான பிரத்தியேகமாக பயிற்சி நெறி
*உத்தியோகத்தர்களுக்கான அலுவலகம் சார்ந்த பயிற்சி நெறிகள் மாதாந்த ஊக்குவிப்புத் தொகையாக ரூபா 5000.00 முழுமையான பயிற்சியினைப் பூர்த்தி செய்தவர்களுக்கே வழங்கப்படும்.
*01.01.2008 அன்று இணைபவர்களுக்கு புதுவருட அன்பளிப்பாக வர்ணக்குடை, தொப்பி, ரோச்லைற், School Bag வழங்கப்படும். அன்று ஊக்குவிப்புத் தொகையும் உறுதிப்படுத்தப்படும்.

Diploma in Microsoft office
Diploma in Desktop publishing
Diploma in Video mixing
Diploma in Hardware Engineering
Diploma in Visual Basic
Diploma in Web Designing
Diploma in Accounting Package
Diploma in Software Engineering

Certificated Course in Internet &Email
Certificated Course in GIT, ICT
Certificated Course in Type Setting
Certificated Course in Auto Cad
Certificated Course in Kids Programme
Certificated Course in TV Repairing
Certificated Course in Phone Repairing

1st Batch- 01.01.2009
2nd Batch- 05.01.2009
3rd Batch- 20.01.2009
30.01.2009

(சி/1923)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 19 01 1921

உதிர்வு 10 01 2008



அமரர்

தவசிப்பிள்ளை இராமலிங்கம்

(ஓய்வு பெற்ற பேரூந்து காப்பாளர்)

திதி: 29.12.2008

மார்கழி மாத பூர்வபட்ச துதியை

அன்புடன் எமையாண்ட பாசமிகு ஐயாவே
ஆண்டொன்று ஆனதையா நீங்கள்
ஆண்டவன் அடிதேடி
ஆறாது எம் மனது மாறாது எம் துயரம்
ஆனாலும் உங்கள் ஆத்மா சாந்தி பெற
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்

(சி/1921)

# மஹேல சதம் அடித்து அசத்தல்; இலங்கை 406 ஓட்டங்களால் முன்னிலையில்

## நான்காம் நாள் ஆட்டம் நாளை

(மிர்பூர்)

அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனாவின் பெறுமதியான சதத்தின்மூலம் இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் நேற்றைய



மூன்றாம் நாள் ஆட்டநேரமுடிவில் 4 விக் கெட்டுக்களை மாத்திரம் இழந்து 291 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதன்மூலம் பங்களாதேஷ் அணியை விட இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை அணி 406 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலுள்ளது.

பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 26ஆம் திகதி மிர்பூரில் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 293 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சமரவீர 90 ஓட்டங்களையும் வான்டொட் 44, சங்கக்கார 43 மற்றும் சமிந்த வாஸ் 37 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஹசன் 5 விக்கெட்டுக்களையும் மோட்டாஷா, ஹீசைன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நேற்றுமுன்தினம் இரண்டாம்நாள் ஆட்ட நிறைவில் 9 விக்கெட்டுக்களையிழந்து 177 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி ஒரு ஓட்டத்தை மாத்திரம் மேலதிகமாக எடுத்து அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 178 ஓட்டங்களை மாத்திரமெடுத்தது.

இதில் ஹயில்ஸ் 33 ஓட்டங்களையும் ஸிட்டிக், ஹீசைன் ஜீனர் ஆகியோர் தலா 29 ஓட்டங்களையும் ஹசன் 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் முரளிதரன்6 விக்கெட்டுக்களையும் வாஸ் 2 விக்கெட்டுக்களையும் பிரசாத், ஹேரத் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 115 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலிருந்த இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 18 ஓட்டங்களை மாத்திரமெடுத்த நிலையில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான வர்ணபுர-8, வான்டொட் 6 ஓட்டங்களையெடுத்து அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

எனினும் தொடர்ந்து 3ஆவது விக்கெட்டுக்காக இணைந்த சங்கக்கார-மஹேல ஜெயவர்த்தனாவின் பொறுப்பான இணைப்பாட்டத்தின் மூலம் சரிவிலிருந்து மீண்டது.

இதில் சங்கக்கார 112 பந்துகளிலும் மஹேல ஜெயவர்த்தனா 109 பந்துகளிலும் அடுத்தடுத்து தமது அரைச்சதத்தை பூர்த்தி செய்ய இலங்கையணி 150 ஓட்டங்களைக் கடந்தது.

எனினும் இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 135 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த நிலையில் சங்கக்கார 67 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனாவுடன் இணைந்த சமரவீர நிதானமாகத் துடுப்பெடுத்தாடினார்.

இந்த ஜோடியின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் இலங்கை அணி 200 ஓட்டங்களைக் கடந்தது.

இந்த ஜோடி இணைப்பாட்டமாக 100 ஓட்டங்களைப்பெற இலங்கை அணி 250 ஓட்டங்களைக் கடந்து ஸ்திரமான நிலையைப் பெற்றது.

இதில் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா 178 ஆவது பந்தில் தனது சதத்தைப்பூர்த்தி செய்து அசத்தினார்.

மறுமுனையில் சமரவீரவும் 78ஆவது பந்தில் அரைச்சதம் கடந்தார்.

எனினும் இந்த ஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 128 ஓட்டங்களை எடுத்த போது திலான் சமரவீர 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் இலங்கை அணி 4 விக்கெட்டுக்களையிழந்து 291 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதன்மூலம் இலங்கை அணி அதன் இரண்டாவது இன்னிங்ஸில் பங்களாதேஷ் அணியைவிட 406 ஓட்டங்கள் வித்தியாசத்திலுள்ளது.

இதில் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா 129 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தார்.

பந்துவீச்சில் மோட்டாஷா 2 விக்கெட்டுக்களையும் அலாம், ஹீசைன் ஜீனர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பங்களாதேஷில் இன்று பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதால் இப்போட்டிக்கு இன்று விடுமுறை நாள் வழங்கப்படுவதால் நான்காம் நாள் ஆட்டம் நாளை நடைபெறும்.

# 2-வது இருபது -20 போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றி

## தொடர் சமனிலையானது

மேற்கிந்தியதீவுகளுடனான இரண்டாவதும் கடைசியுமான இருபது-20 போட்டியில் நியூசிலாந்து அணி 36 ஓட்டங்களால் வெற்றியீட்டிக்கொண்டது.

இதன் மூலம் இருநாடுகளுக்கும் இடையிலான இருபது-20 தொடரும் 1:1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது. ஏற்கனவே இருநாடுகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் முடிவு கிடைக்கப் பெறாமல் சமனிலையானமை குறிப்பிடத்தக்கது.

ஹெமில்டனில் நேற்று நடைபெற்ற இரண்டாவது இருபது-20 போட்டியின் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 191 ஓட்டங்களை பெற்றது.

இதில் ஆரம்ப விக்கெட்டுக்காக மக்கலம், ரைடர் ஜோடி 70 பந்துகளில் 130 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் நியூசிலாந்து அணி எஞ்சிய 61 ஓட்டங்களை பெறுவதற்குள் 9 விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

இதில் ஜெஸ் ரைடர் 41 பந்துகளில் 7 பவுண்டரிகளும், 3 சிக்ஸர்களும் அடங்கலாக 62 ஓட்டங்களை பெற்றதோடு மறுமுனையில் மக்கலம் 34 பந்துகளில் 6 பவுண்டரிகளும், 4சிக்ஸர்களும் அடங்கலாக 59 ஓட்டங்களை குவித்தார்.

இதனை தொடர்ந்து சவாலான வெற்றி இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய மேற்கிந்தியதீவுகள் அணியினால் 20 ஓவர்களுக்கும் 7 விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களையே பெற முடிந்தது.

அதிகபட்சமாக சர்வான் 36 பந்துகளில் 3 பவுண்டரிகளும், 3 சிக்ஸர்களும் அடங்கலாக 53 ஓட்டங்களை பெற்றார். பந்துவீச்சில் விக்டோரி மற்றும் பட்டேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

### சுப்பர் ஓவர் முறைக்கு நியூ.அணித்தலைவர் எதிர்ப்பு

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'சுப்பர் ஓவர்' முறைக்கு நியூஸிலாந்து அணித்தலை வர் டானியல் விக்டோரி எதிர்ப்பு தெரிவித்துள் ளார். நியூஸிலாந்து



சென்றுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி இரண்டு போட்டிகளைக் கொண்ட இருபது-20 தொடரில் பங்கேற்றது.

முதல் போட்டி 'சுப்பர் ஓவர்' முறையில் மேற்கிந்தியதீவுகள் அணி வென்றது. சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) விதிகளின் படி இருபது-20 ஆட்டம் சமனிலையில் முடிந்தால் 'போல் அவுட்' முறையில் வெற்றியாளர் முடிவு செய்யப்படும். இதற்கு மாற்றாக 'சுப்பர் ஓவர்'முறை தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் ஒரே ஓவரில் வெற்றியாளர் நிர்ணயிக்கப்படுவார்.

இது குறித்து விக்டோரி கூறுகையில், போட்டியின் முடிவு சமனிலையானதில் தவறு என்ன இருக்கிறது? இந்த முறையை நீக்க வேண்டும் என புதிய முறை கொண்டுவரப்பட்டுள்ளது. ஒருவேளை வெற்றிபெற்ற அணியின் பக்கம் இருந்தால் மகிழ்ச்சியாக இருந்திருக்கும். இது இருபது-20 கிரிக்கெட், ஒரு ஓவர் போட்டி அல்ல. இதற்கு மேலும் இந்த ஆட்டத்தை மோசமாக்க வேண்டாம் என்றார்

# விஸ்வரூபமெடுத்தார் டுமினி — தென்னாபிரிக்கா வலுவான நிலையில்

(மெல்பேர்ன்)

டுமினியின் சிறப்பான சதத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி முதலாவது இன்



னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 459 ஓட்டங்களை எடுத்தது.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி 65 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட், 2 இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்று தெடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 25ஆம் திகதி மெல்பேர்னில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 394 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 7 விக் கெட்டுக்களையிழந்து 198 ஓட்டங்களைமாத்திரமெடுத்திருந்தது. இந்நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி டுமினி-ஸ்ரையனின் 180 ஓட்டங்களை 9ஆவது விக்கெட் இணைப்பாட்டமாக எடுக்க முன்னிலை பெற்றது.

இறுதியில் தென்னாபிரிக்க அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 459 ஓட்டங்களை எடுத்தது.

இதில் டுமினி 166 ஓட்டங்களை எடுத்து தனது இரண்டாவது டெஸ்டில் கன்னிச் சதத்தைப் பதிவு செய்ததுடன் ஸ்ரையன் 76 ஓட்டங்களை எடுத்து தனது முதலாவது அரைச்சதத்தை பூர்த்திசெய்தார்.

முன்னதாக அணித்தலைவர் சிமித் 62 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் சிடில் 4 விக்கெட்டுக்களையும் ஹயூறிஸ் 3, ஜோன்ஸன் 2 விக்கெட்டுக்களையும் ஹசி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 65 ஓட்டங்களால் முன்னிலையிலிருந்த அவுஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 4 ஓட்டங்களைஎடுத்திருந்தது. நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# புலிகளின் விமானங்களுக்கான எரிபொருள் வந்து சேர்ந்துள்ளது

(கொழும்பு)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடந்த வாரம் ஆயுதங்களைத் தரையிறக்கிய தமிழீழ விடுதலைப் புலிகள், அக்கப்பலில் விமானங்களுக்கானஎரிபொருளையும்கொண்டு வந்துள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் லக்பிம ஆங்கிலவார ஏடு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அதில் தெரிவிக் கப்பட்டவற்றின் முக்கிய பகுதிகள் வருமாறு,

விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக ஆயுதங்களைப் பெற்றுவருவது இரகசியமானதல்ல என்ற விடயம் தற்போது அம்பலமாகியுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்று இலங்கையை நோக்கிப் புறப்பட்டது.

இக்கப்பல் பிலிப்பைன்ஸ் நாட்டில் இருந்தே பயணத்தை மேற்கொண்டிருந்தது. பின்னர் அது இந்தோனேஷியாவுக்குச் சென்று அங்கு பீரங்கி மற்றும் மோட்டார் எறிகணை களையும் வானூர்திக்குரிய எரிபொருளையும் ஏற்றிக் கொண்டு இலங்கை நோக்கி புறப் பட்டது.

இத்தகவலை புலனாய்வுத் துறை, கடற் படையினருக்கு வழங்கியதும் படை வட்டாரங்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன.

முல்லைத்தீவு கடற்பரப்பில் டோறாக்கள் சுற்றுக்காவலில் ஈடுபடுத்தப்பட்டன. எனினும் கடந்த 19ஆம் திகதி ஆளில்லாத உளவு விமானங்களின் மூலம் எடுக்கப் பட்ட ஒளிப்படங்களில் படகுகளில் கரைகளுக்கு கொண்டுவரப்பட்ட ஆயுதங்களை விடுதலைப் புலிகள் வாகனங்களில் ஏற்றுவது கண்டறியப்பட்டுள்ளது.

தாக்குதல் வானூர்திகள் அப் பகுதிக்கு அனுப்பப்பட்டபோதும் பாதகமான காலநிலை காரணமாக அவற்றால் நடவடிக்கைகளை மேற் கொள்ள முடியவில்லை.

எனினும் இருமணிநேரத்தின்

## லக்பிம தகவல்

பின்னர் ஞாயிற்றுக்கிழமை காலை கடற் படையினர் நடுத்தர அளவுள்ள றோலர் ஒன்றை கண்ட றிந்து தாக்கியுள்ளனர்.

கடற்படையினர் இந்தக் கடற்பகுதிகளில் தொடர்ந்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர் அதன் காரணம் தெளிவானது.

விடுதலைப் புலிகளின் பாரிய ஆயுதக் கப்பலை அவர்கள் தொடர்ந்து தேடிவருகின்றனர். ஆனால் கடற்படையினரால் அதனைக் கண்டறிய முடியவில்லை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## பெற்றோல்...

வழக்கு ஒன்றில் உயர் நீதிமன்றமும் பெற்றோல் விலையை 100 ரூபாயாகக் குறைக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது.

இதனை ஏற்க அரசு மறுத்து வந்தது.மேலும் இலங்கையில் எண்ணெய் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள இந்தியன் ஒயில் கூட்டுத்தாபனம் குறைத்த பெற்றோல் விலையையும் நிர்ப்பந்தத்தின் பேரில் அரசு உயர்த்த வைத்தது.

இச் சூழ்நிலையில் பெற்றோல் விலையை லீற்றர் ஒன்றுக்கு 122 ரூபாயிலிருந்து 117 ரூபாயாக குறைக்க அரசு முடிபு செய்திருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

## முல்லைத்தீவை நோக்...

நோக்கி படையினர் நேற்று முன் தினம் சனிக்கிழமை காலை 5.30 மணியளவில் ஆட்லறி மற்றும் பல் குழல் வெடிகணைச் சூட்டாதரவுடனும் கனரக போர்க் கருவிகளின் சூட்டாதரவுடனும் பாரிய முன் நகர்வினை மேற்கொண்டனர்.

இம் முன் நகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகள் கடும் எதிர்த்தாக்குதலை நடத்தி பிற்பகல் ஒரு மணியளவில் படையினரின் முன் நகர்வினை முறியடித்தனர்.

மேலும் முல்லைத்தீவில் உள்ள உடுப்புக்குளம் பகுதியில் நேற்று முன் தினம் காலை 9.30 மணியளவில் படையினர் மேற்கெண்ட முன் நகர்வுத் தாக்குதலை பிற்பகல் 12.30 மணியளவில் விடுதலைப் புலிகள் முறியடித்துள்ளனர்.

இதில் படையினர் 18 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் பெருமளவிலானோர் காயமடைந்துள்ளனர். படைத் தரப்பைச் சேர்ந்தவரின் உடலம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை மோதல்கள் நடைபெற்றதனை உறுதிப்படுத்திய இராணுவத் தலைமையகம் விடுதலைப் புலிகளுக்கு பெருமளவு இழப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு இருப்பதாகவும் சில படையினர் காயமடைந்திருப்பதாகவும் சில படையினரைக் காணவில்லை எனவும் அவர்களைத் தேடி வருவதாகவும் அறிவித்துள்ளது. (ச-5)

## வத்தளையில்...

மூவரும் ராகம மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சைகள் பலனளிக்காத நிலையில் இறந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்களில் 13 பேர் பொதுமக்கள் எனவும், ஏனையவர்கள் விசேட அதிரடிப் படையினர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தற்கொலைக் குண்டுதாரி பொதுமகன் போல் வந்தே தாக்குதல் நடத்தியதாகவும் தற்கொலைதாரி பாதுகாப்பு அதிகாரிகள் தங்கியிருந்த இடத்திற்குள் நுழைய முற்பட்டபோது அதிகாரி ஒருவர் தடுத்து நிறுத்தியபோதே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறினார்.

தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்றபோது அம் முகாமினுள் 67 விசேட அதிரடிப் படையினர் இருந்ததாகவும் அவர் மேலும் கூறினார். (ச-5)

## புலிகளின்...

படையினருக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஜெட் விமானங்களை கொண்டு இந்த தாக்குதல் மேற்கொள் ளப்பட்டதாக மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (ச)

## விமானங்கள்...

கட்சித் தலைவர் மேலும் கூறியதாவது,

பருவப் பெயர்ச்சி மழைகாலத்தில் எமது படையினர் மும்முனைத் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர். இவ்வாறான சூழ்நிலையில் கடல்மார்க்கமாக படையினருக்கு தேவையான ஆளணிகள், ஆயுதங்களை கொண்டு செல்வது கடினமான விடயமாகும்.

எனவே விமானப்படையினரின் ஆளணியைக் கொண்டு செல்வதுடன் காயமடையும் படையினரை உடனடியாக வைத்திய சாலைக்கு கொண்டு செல்வதற்கு உகந்த என்-32, சீ-30 ரக விமானங்கள் இருக்க வேண்டும்.

நான் பிரதமராக இருந்தபோது இவ்வாறான 12 விமானங்கள் இருந்தன. ஆனால் இன்று சீ-130 ரக இரண்டு விமானங்களே உள்ளன. எனவே புதிதாக விமானங்களை கொள்வனவு செய்ய வேண்டுமென்ற விமானப் படையினரின் கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளதோடு இக்கோரிக்கையை முன்வைத்தவர்களை இடமாற்றம் செய்துள்ளது.

இது புலிகளுக்கும் தெரியும். அரசாங்கத்திற்கும் புரியும். இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே கடந்த வாரம் 500க்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்துள்ளனர். யுத்த களத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை குறைவு.

ஆனால் காயமடைந்து வைத்திய சாலைக்கு கொண்டு செல்வதற்கு தாமதிக் கப்பட்டதனாலேயே அதிகளவு படையினர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கு காரணம் விமானங்கள் இல்லாத தேயாகும். எமது படையினரின் இழப்புகளுக்கு அரசாங்கமே பொறுப்பு கூறவேண்டும் என்றார். (ச)

## எதிர்காலப் போராட்டம்...

அச்செவ்வியின் ஒரு பகுதி வருமாறு,

உங்கள் பாதுகாப்புக்காக ஏதாவது ஒரு வெளிநாட்டுக்குச் செல்லப் போவதாக வதந்தி உலவுகிறது.

உங்கள் சகாக்களை விட்டுச் செல்ல நீங்கள் முயற்சிக்கிறீர்களா எனக் கேட்கப்பட்டபோது, இவை அனைத்தும் இலங்கை அரச ஊடகங்கள் நடத்தும் முற்றிலும் பொய்யான பிரசாரங்கள் மாத்திரமே.

நாம் ஒருபோதும் எமது மண்ணை விட்டுச் செல்லமாட்டோம். மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காக இறுதிவரை போராடுவோம் என பிரபாகரன் பதிலளித்துள்ளார்.

நீங்கள் நாளுக்குநாள் வயதாகி வருகிறீர்கள். ஆனால் ஈழம் இன்னும் கைகூடவில்லையே என்ற கேள்விக்கு பதிலளித்த பிரபாகரன், எமது போராட்டம் ஒரு சுதந்திர போராட்டமாகும். எமது சுதந்திரப் போராட்டத்திற்கு கால எல்லையோ வயதெல்லையோ கிடையாது எனக் கூறியுள்ளார்.

கிளிநொச்சியை சில தினங்களில் இராணுவம் கைப்பற்றிவிடும் என்ற கருத்துத் தொடர்பாக பதிலளிக்கையில், எமது போராட்ட வரலாற்றில் இதைவிட பாரிய நடவடிக்கைகளுக்கும் இலங்கை அரசின் பிரசாரத்திற்கும் முகம் கொடுத்துள்ளோம்.

நாம் யாழ்ப்பாணத்தைக் கைவிட்டு வன்னிப் பிரதேசத்திற்கு வந்தபோது எம்மால் மீண்டும் ஒருபோதும் பாரம்பரிய இராணுவமாக செயற்படமுடியாது என இலங்கை அரசு பெரும் பிரசாரம் மேற்கொண்டது.

ஆனாலும் அதன் பின் ஓயாத அலைகள் 1,2 மற்றும் 3 மூலம் முல்லைத்தீவு,ஆனையிறவு மற்றும் வன்னியின் பெரும் பகுதியை கைப்பற்றினோம்.

தற்போது நாம் விரைவில் கிளிநொச்சியை இழந்துவிடுவோம் என இலங்கை அரசு பிரசாரம் செய்கிறது. எவ்வாறெனினும் கடந்த சில நாட்களில் கிளிநொச்சியில் நடைபெற்ற மோதல்களில் இலங்கை இராணுவம் சந்தித்த பாரிய இழப்புக்கள் புலிகளின் எதிர்கால வெற்றியை வெளிப்படுத்துகிறது எனக் கூறியுள்ளார்.

உங்கள் பயங்கரவாத செயற்பாடுகளை விரும்பாததால்தான் சர்வதேச சமூகம் உங்களை கைவிட்டுள்ளது. தேசிய மற்றும் சர்வதேச சக்திகள் அனைத்தையும் உங்களால் தோற்கடிக்க முடியாது அல்லவா என்ற கேள்விக்கு பதிலளிக்கையில்,

எமது போராட்டம் நேர்மையான போராட்டம் என சர்வதேச சமூகம்இப்போது புரிந்து கொண்டுள்ளது. நாம் பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை.

மக்களை இலக்கு வைத்து விமானக் குண்டு வீச்சுகளை மேற் கொள்வது மற்றும் அவர்களுக்கு பொருளாதார இழப்புக்களை ஏற்படுத்தும் இலங்கை அரசின் நடவடிக்கைகள் பயங்கரவாத நடவடிக்கைகள் இல்லையென்றால் மக்களை பாதுகாப்பதற்காகவும் அவர்களின் உரிமைகளைப் பெறுவதற்காகவும். மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பயங்கரவாத நடவடிக்கைகளாகுமா என சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும். இதை புரிந்து கொள்ளுமாறு சிங்கள மக்கள் உட்பட முழு சர்வதேச சமூகத்தையும் நாம் கோருகிறோம் எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரித்ததன் மூலம் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கியமை குறித்து தற்போது என்ன நினைக்கிறீர்கள்? அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் சிலரால் உங்கள் இயக்கத்திற்கு பணம் வழங்கப்பட்டதால்தான் அத்தேர்தலை பகிஷ்கரித்தீர்கள் எனக் கூறப்படுகிறது. என்ற கேள்விகளுக்கு பதிலளிக்கையில்,

மக்கள் தாமாகவே தேர்தலை பகிஷ்கரித்தனர். மக்களின் உணர்வுகளை நாம் மதிக்கிறோம். மக்கள் தேர்தலை பகிஷ்கரித்தமை தொடர்பாக பொய்யான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

எமது விடுதலைப் போராட்டம் நேர்மையான போராட்டமாகும். பணம், லஞ்சம் மற்றும் பதவி போன்றவற்றினால் அதை ஒழிக்க முடியாது எனக் கூறியுள்ளார்.

புலிகள் பலமிழந்துவிட்டதாக சர்வதேச ஊடகங்களும் கூறுவது குறித்து கேட்கப்பட்டபோது நாம் பலமிழந்து விடவில்லை. எமது பலம் மக்கள்தான். அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற சண்டை இதற்கு பதிலளிக்கின்றது. எமது எதிர்கால போராட்டங்கள் மூலம் எமது பலம் குறைந்து விடவில்லை என்பது தெரியவரும் என பதிலளித்துள்ளார். (ச-5)

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி**

**அறிவித்தல்**

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணி இன்று காலை 9 மணிமுதல் 12 மணிவரை வழங்கப்படும்.

அனைத்து மாணவர்களும் பாடசாலையில் பெற்றுக் கொள்ளவும்.

யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

-அதிபர்

(C-2040)

DMI
ஸ்ரான்லி வீதி, யாழ்.
ஜனவரி – 10
காலை 9.00 மணி
A/L 2011
DMI (கலை, வர்த்தகப் பிரிவுகள்)
நாவலர் வீதி, யாழ்.
"மின்னுவதெல்லாம் பொன்னல்ல"

இப் புத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.